	4.3.4 மிக மோசமான சிறார் ஊழிய வகைகள் தொடர்பான சர்வதேச தொழில் தபானத்தின் சமவாயம் (C 182) 1999	83
	4.3.5. குறைந்தபட்ச வயது தொடர்பான சர்வதேச தொழில் தாபனத்தின் சமவாயம் (C 138) 1973	84
	4.3.6 பாலியல் தொழிலுக்காகப் பெண்கள் மற்றும் சிறுவர்களை மனித வியாபாரம் செய்தலைத் தடுத்து நிறுத்தல் மற்றும் அதற்கு எதிராகல் பற்றிய சார்க் (SAARC) சமவாயம் (2002)	85
4.4	இலங்கையின் சட்டக் கட்டமைப்பு	85
	4.4.1 2006 ஆம் ஆண்டில் தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 360 இ (1)	
	4.4.2 மனித வியாபாரம் தொடர்பாகத் தண்டனைச் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏனைய குற்றங்கள்	87
5.	நியம செயற்படு முறைகள் (SOP) இன் குறிக்கோள்கள் மற்றும் கட்டமைப்பு	95

5.1	முதல் தகவலைப் பதிவுசெய்தல் / முறைப்பாட்டைப் பதிவுசெய்தல் / அவசரத் தேவைகளை இனங்காணுதல்	95
5.1.1	தகவல்களை / கிடைத்துள்ள முறைப்பாடு மற்றும் ஆரம்ப விசாரணைகளை உறுதிசெய்து கொள்ளல்	97
5.2	மீட்பு	98
5.3	பூர்வாங்க பரிசோதனை மற்றும் பரீட்சிப்புப் பட்டியல்	99
5.4	நேர்காணலுக்கு முன்னரான மதிப்பீட்டை இரு கட்டங்களில் மேற்கொள்ள முடியும்:	100
5.5	தேவைகளை அடையாளம் காணல்	103
5.6	பூர்வாங்கத் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளல்	104
5.7	பாதிக்கப்பட்ட பிள்ளையை நேர்காணுதல்	105
5.8	இடைக்கால மற்றும் நீண்டகால தேவைகளுக்கு பதிலளித்தல்	105
5.9	மருத்துவப் பராமரிப்பு	107
5.10	வெளிநாட்டுப் பிரஜைகளின் விசேட தேவைகள்	108
5.11	பாதிக்கப்பட்ட பிள்ளையின் பராமரிப்பும் பாதுகாப்பும்	109
5.12	பெற்றோர், சட்ட ரீதியான பாதுகாவலர் அல்லது பொருத்தமான நபர் (Fit Person) ஆகியோருக்கு தெரியப்படுத்தப்பட வேண்டிய தகவல்கள்	110
5.13	பொலிஸாரினால் நடத்தப்படும் விசாரணை (வழக்குக்கு முன்னர்)	110
5.13.1	நீதிமன்றத்துக்கு தகவல்களை அறிக்கையிடல்	112
5.14	வழக்கு	112
5.15	வழக்கின் பின்னர்	113
5.16	சிறுவர் மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கையரை மற்றும் வெளிநாட்டவர்களை இலங்கைக்கு அழைத்துவரல் மற்றும் இலங்கையிலிருந்து திருப்பியனுப்பல்	114
5.17	மீள் ஒருங்கிணைப்பு	115
	பின்னிணைப்பு 1 - தகவலறியும் விசாரணைக்கான குறிகாட்டிகள்	116
	பின்னிணைப்பு 2 - மனித வியாபாரத்தினால் பாதிக்கப்படக்கூடிய ஆட்களை அடையாளம் காணும் செயற்பாட்டில் உதவக்கூடிய பூர்வாங்க விசாரணை முறைமை.	118

1. அறிமுகம்

மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல், பாதுகாத்தல் மற்றும் பரிந்துரைத்தல் பற்றிய நியம செயற்படு முறைகளானது **(SOP)** அமைச்சரவை அங்கீகாரத்துடன் 2014 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அமுலுக்கு வந்தது. இச்செயல்விதிகள் புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் (IOM) உதவியுடன் பன்முகப் பங்குதாரர்களுடன் விரிவாக நடத்தப்பட்ட ஆலோசனைச் செயன்முறை மூலமாக மனித வியாபாரத்துக்கு எதிரான தேசிய செயலணியினால் (NAHTTF) உருவாக்கப்பட்டது. மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை அடையாளங்காணல், அவர்களுக்கு உதவுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் பாதுகாப்பளித்தல் ஆகியவைற்றுக்கு வழிகாட்டுதல் தொடர்பாக திட்டவட்டமான படிமுறைகளையும் ஒழுங்குகளையும் உள்ளடக்கிய ஓர் SOP இன் தேவை இச்செயலணியினால் அடையாளங்காணப்பட்டது. மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பாகப் பின்பற்றப்படவேண்டிய விசேட செயல்விதிகளுக்கான தேவை தற்போது எழுந்துள்ளது. ஏனென்றால் தற்போது அமுலிலுள்ள நியம செயற்படு முறைகளானது **(SOP)** க்களில் இது பற்றி விசேடமாகக் குறிப்பிட்டுக் கூறப்படவில்லை.

சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான கோட்பாடுகளும் வழிகாட்டல்களும் பின்பற்றப்படுகின்றன என்பதையும் மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பாக சகல பங்குதாரர்களினாலும் தனித்துவமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்துவதற்காக நியம செயற்படு முறைகளானது **(SOP)** காணப்படுகின்ற இந்தக் குறையினைத் தீர்ப்பதைப் பின்வரும் வழிகாட்டல் குறிப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது. மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை அடையாளங்காணல், அவர்களுக்கு உதவுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் பாதுகாப்பளித்தல் தொடர்பில் உள்ளூராட்சி மற்றும் சமுதாய மட்டத்தில் உள்ள ஆரம்பக் கட்ட பொறுப்பாளர்களுக்கு உதவுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. பொலிஸ் உத்தியோகத்தர்கள், பிரதேச மற்றும் மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள், நன்னடத்தை அதிகாரிகள், தொழில் அதிகாரிகள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் மேற்படி ஆரம்பக் கட்ட பொறுப்பாளர்கள் என்பதில் அடங்குகின்றனர்.

மேலும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சனசமூக உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பணியாளர்கள், ஏனைய பங்கீடுபாட்டாளர்கள் உள்ளிட்ட சிறுவர்களுடன் பணியாற்றும் அதிகாரிகளும் தொழில் ரீதியானவர்களும் சிறுவர் மனித வியாபாரம் தொடர்பான பிரச்சினையை வினைத்திறன்மிகு முறையில் கையாள்வதற்கும் பாதிக்கப்பட்டவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்வது என்பது தொடர்பான தர நியமங்களை உருவாக்குவதற்கும் இந்த வழிகாட்டல் குறிப்பைப் பயன்படுத்த முடியும்.

2. பின்புலம்

மனித வியாபாரமானது உலகின் பாரியளவில் திட்டமிடப்பட்டுள்ள குற்றச் செயல்களில் ஒன்றாகும். மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் உடல் ரீதியான மற்றும் உள ரீதியான மன அதிர்ச்சியினால் பாதிக்கப்படுகின்ற காரணத்தினால் இச்செயற்பாடு ஒரு கொடூரமான குற்றச் செயலாகக் கருதப்படுகின்றது. இது சிறுவர்களின் ஒட்டுமொத்த அபிவிருத்தி மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதுடன் அவர்களின் அடிப்படை உரிமைகளையும் மீறுகின்றது. இலங்கையில் சிறுவர் மனித வியாபாரம் பாரிய அளவில் இடம்பெறுகின்றது என்பதைக் காட்டுவதற்கான குறிகாட்டிகள் இல்லாவிடினும், குறிப்பாக சுற்றுலாப் பயணிகளுக்கு மத்தியில் பிரபல்யம் பெற்றிருக்கும் நாட்டின் கரையோரப் பிரதேசங்களில் மனித வியாபாரம் செய்வதில் ஈடுபட்டுள்ள நபர்கள் சிறுவர்களையும் சிறுமிகளையும் வர்த்தக ரீதியிலான பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவதற்காக சுரண்டலுக்கு உட்படுத்தி வருகின்றமையினை அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. தேயிலைப் பெருந்தோட்டப் பிரதேசங்களிலிருந்து கொழும்பிற்கு வீட்டு வேலைக்கெனக் கொண்டு வரப்படும் சிறுவர்கள் உடல் ரீதியான, பாலியல் ரீதியான மற்றும் உள ரீதியான துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர்களுக்குரிய சம்பளங்கள் செலுத்தப்படாதிருப்பதாகவும் அவர்களுடைய நடமாடும் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுவதாகவும் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன - ஊழியம் விற்கப்படுவதற்கான குறிகாட்டி.[1] மேலும், மனித வியாபாரம் செய்யும் நபர்கள் சிறு கடைகள், விவசாய நிலங்கள் மற்றும் முறைசாராத சந்தைகள் என்பவற்றில் சிறுவர்களிடமிருந்து கட்டாய ஊழியத்தை பெற்றுக்கொள்வதுடன், இலங்கையின் பெரிய நகரங்களில் அவர்களை பிச்சையெடுத்தலில் அல்லது குற்றச்செயல்களில் ஈடுபடுத்தி வருவதனையும் காண முடிகின்றது.

மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களை உரிய நேரத்தில் அடையாளம் கண்டு, பொருத்தமான பாதுகாப்பையும் உதவிகளையும் அவர்களுக்கு வழங்க வேண்டும். சுகாதாரப் பராமரிப்புடன் கூடிய விதத்தில் அவர்களை ஒரு பாதுகாப்பான சூழலில் தங்கவைத்தல், உளவியல் ஆதரவு மற்றும் குடும்பத்துடனும் சமூகத்துடனும் மீள ஒருங்கிணைத்தல் என்பவற்றையும் இது உள்ளடக்குகின்றது. துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் என்பன ஒரு பிள்ளையின் மீது உடல் ரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்தி, அப்பிள்ளையின் கற்றல் வளர்ச்சி மற்றும் உளவியல் அபிவிருத்தி என்பவற்றுக்கு இடையூறு விளைவிக்கின்றன. மனித வியாபாரத்துக்கு உட்படுத்தப்படும் சிறுவர்கள் மிகவும் அபாயகரமான சூழல்களுக்கு முகங்கொடுக்கின்றனர். இவ்வகையான கடுமையான துஷ்பிரயோகமும் மனஅழுத்தமும் சிறுவர்கள் மற்றும் வளரிளம் பருவத்தினர் பிழைத்து வாழப் பொருத்தமான ஆளுமையினை உருவாக்கக் காரணமாக இருந்த போதிலும் சாதாரணமானதும் அச்சுறுத்தல்கள் அற்றதுமான சூழலுக்கு ஈடுகொடுப்பதற்கு போதிய தகவமைப்பு அற்றதாகவே காணப்படுகின்றது. உலக சுகாதார அமைப்பின் பிரகாரம், துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படும் சிறுவர்கள் பொருத்தமற்ற பராமரிப்பாளர்களுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் அவர்கள் மீது

[1] மனித வியாபாரம் பற்றிய அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கை 2019

நம்பிக்கை வைப்பதற்கும் நிர்ப்பந்திக்கப்படுவதாகவே பொதுவாக உணர்கின்றனர். மனித வியாபாரிகளின் நம்பிக்கைத் துரோகத்திற்கு உள்ளாகும் சிறுவர்கள் நீண்டகால உளவியல் தாக்கங்களுக்கு முகங்கொடுக்கும் சாத்தியத்தினைக் கொண்டுள்ளதுடன் தங்களின் சுயாதீனத்தினையும் நெருக்கத்தினையும் விருத்திசெய்து கொள்வது இவர்களுக்குக் கடினமானதாக அமைந்துவிடுகின்றது. துஷ்பிரயோகத்தின் விருத்திசார் தாக்கங்களுள் பிணைப்பு துண்டிக்கப்படல், சுய கௌரவம் பாதிக்கப்படல், மட்டுப்படுத்தப்பட்ட சமூக உறவுகள் ஆகியவை காணப்பட முடியும். அதீத பாலியல் மயமான நடத்தை அல்லது அதீத ஆக்ரோஷமிக்க நடத்தை, போதைப் பொருள் பாவனை, சுயகாயம் ஏற்படுத்தல் அல்லது மனஅழுத்தம் மற்றும் வியாகூலத் தன்மை ஆகியவற்றினை எதிர்கொள்வதற்கு ஏனைய செயலற்ற வழிகளைப் பயன்படுத்தல் ஆகிய பிரச்சினைகளும் இவர்கள் மத்தியில் காணப்பட முடியும்.

3. சிறுவர் மனித வியாபாரக் குற்றச் செயல்

மனித வியாபாரமானது கோடிக்கணக்கான டாலர்கள் இலாபத்தினை வழங்குகின்ற உலகில் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் குற்றவியல் செயற்பாடுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. அதிகரித்த புலப்பெயர்வு மற்றும் உலகளாவிய பொருளாதார நிலைமைகள் என்பன மனித வியாபாரத்துக்கான கேள்வியையும் நிரம்பலையும் உருவாக்குகின்றன. போதைப் பொருள் மற்றும் சட்டவிரோத ஆயுத வியாபாரத்தைப் போலல்லாது, மனித வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் அவர்களின் பண்டங்களான "பாதிக்கப்பட்டவர்களை" மீள்-விற்பனையும் செய்து தமக்குப் பாரிய இலாபங்களை உருவாக்கிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் மீண்டும் துயரங்களைக் கொடுக்க முடியும்.

சிறுவர் மனித வியாபாரமானது உலகின் ஒவ்வொரு பிராந்தியத்திலும் காணப்படும் ஒரு பாரதூரமான குற்றச் செயலாகும். இது கிட்டத்தட்ட சிறுவர்களின் அனைத்து உரிமைகளையும் மீறுகின்றது. கடந்த தசாப்தத்தில் இருந்தே அரசுகளும் ஏனைய பங்குதாரர்களும் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன. சிறுவர் மனித வியாபாரத்துக்கு வழங்கப்பட்டுவரும் அதிகரித்த சர்வதேச முக்கியத்துவத்தின் காரணத்தினாலும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதிலுள்ள அவசரத்தின் காரணமாகவும் இப்பிரச்சினையினைத் தடுப்பதற்கும் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாத்து அவர்களுக்கு உதவுவதற்கும் குற்றச்செயலுக்கு எதிரான கடுமையான சட்டத்தினைச் செயற்திறன்மிகு முறையில் அமுல்படுத்தவும் முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கட்டாய ஊழியம், சிறுவர்களை ஈடுபடுத்தும் பாலியல் சுற்றுலாத்துறை மற்றும் பாலியல் தொழில், பிச்சையெடுக்கவைத்தல் மற்றும் தத்தெடுப்பு ஆகியவையே சிறுவர் மனித வியாபாரத்தின் சுரண்டல்மிக்க நோக்கமாகும். வீடுகளில் அடிமைச் சேவகம்

செய்தல், விவசாய வேலை, சிறு அளவிலான தொழிற்சாலைகள் மற்றும் கடைகளில் வேலை செய்தல் உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் சிறுவர் ஊழியம் இடம் பெறுகின்றது. சிறுவர் ஊழியம் மலிவானதெனவும் கட்டுப்படுத்தக்கூடியதெனவும் கருதப்படுகின்றது. இதனால் இதற்கான கேள்வி இருந்து வருகின்றது. சர்வதேச தொழில் தாபனத்தின் (ILO) தகவல்களின் பிரகாரம்,[2] சிறார்களைப் பாலியல் ரீதியாகச் சுரண்டுவது பின்வரும் நடைமுறைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றது: சிறுவர் பாலியல் தொழில், சிறுவர்களைப் பயன்படுத்தும் பாலியல் சுற்றுலாத்துறை, சிறார்களை ஈடுபடுத்தி ஆபாசப் படங்களைத் தயாரித்தல், மேம்படுத்துதல் மற்றும் விநியோகித்தல் மற்றும் பாலியல் காட்சிகளில் சிறுவர்களைப் பயன்படுத்தல். போதைப்பொருள் வர்த்தகத்திலும் சிறுவர்கள் பயன்படுத்தப்படுகின்றார்கள். இதில் சிறார்கள் ஒன்றில் போதைப்பொருட்களைக் காவிச் செல்பவர்களாக அல்லது விற்பனை செய்பவர்களாகச் சுரண்டல்மிகு வழிகளில் பயன்படுத்தப்பட்டு போதைப்பொருள் பாவனைக்கும் அடிமையாக்கப்பட்டு அதன் மூலம் சுரண்டலின் மனித வியாபாரப் பொறிக்குள் சிக்கவைக்கப்படுகின்றார்கள். போதைப்பொருள் கடத்தல் செயற்பாடு சட்டவிரோதமானதாக இருக்கின்ற காரணத்தினால் கைதுசெய்யப்படும் சிறுவர்கள் பொதுவாகக் குற்றவாளிகளாக நடத்தப்படுகின்றார்களேயன்றிப் பாதிக்கப்பட்டவர்களாக அடையாளம் காணப்படுவதில்லை. இக்காரணத்தினால் இவர்கள் மீள்பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்படுகின்றது.

[2] C 182 சிறுவர் ஊழியத்தின் மோசமான வடிவங்கள் பற்றிய சமவாயம் 1999

உளவியல் ரீதியான மற்றும் உடல் ரீதியான பலவந்தத்தின் மூலம் 18 வயதிற்கு குறைந்த சிறுவர்களையும் சிறுமிகளையும் பிச்சையெடுப்பதற்குப் பலவந்தப்படுத்துவது சிறுவர் பிச்சையெடுத்தலாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பொருளாதாரச் சிரமங்கள் காரணமாகப் பிச்சையெடுப்பதற்குக் குடும்ப உறுப்பினர்களே சிறுவர்களைப் பலவந்தப்படுத்துகின்ற காரணத்தினால் இப்பிரச்சினையினைக் குறிப்பாக ஒழுங்குபடுத்துவது கடினமானதாகும். இதன்போது பிச்சையெடுத்தல் நடைபெறுகின்றது என்பதை உறுதிப்படுத்த பெற்றோர் பிள்ளையின் மீது கொண்டுள்ள அதிகாரம் பயன்படுத்தப்படுகின்றது. பாரிய இலாபமீட்டுவதற்காகத் தனிநபர்களைக் கடடுப்படுத்திப் பிச்சையெடுப்பதை ஒரு தொழிலாக நடத்திவரும் நபர்கள் இலாபமீட்டுவதற்கான ஒரு வழியாக ஒழுங்கமைக்கப்பட்ட பிச்சையெடுத்தல் தொழில் துரிதமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இவர்கள் தமக்குக் கிடைக்கும் இலாபத்தில் மிகவும் சிறிய தொகையினைப் பாதிக்கப்படுவோருக்குக் கொடுக்கின்றனர். தத்தெடுக்கும் நோக்கத்திற்காகப் பிள்ளைகளை வாங்க முடியும் மற்றும் / அல்லது மனித வியாபாரம் செய்ய முடியும். அனாதை இல்லங்களிலிருந்தும் வைத்தியசாலைகளில் இருந்தும் பிள்ளைகள் பொதுவாகப் பெறப்படுகின்றனர் அல்லது கடத்தப்படுகின்றனர் அல்லது பிள்ளையைச் சுரண்டும் நோக்கத்திற்காக பிள்ளையின் கட்டுக்காவலை விட்டுத்தருவதற்காகப் பெற்றோர்கள் ஏமாற்றப்படலாம், ஆசைகாட்டி மோசம் செய்யப்படலாம் அல்லது பலவந்தப்படுத்தப்படலாம். பிள்ளைகளைத் தத்துக்கொடுப்பதற்காக விற்பனை செய்வது 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவைச் (திருத்தச்) சட்டத்தின் பகுதி 360 (ஈ) இன் கீழ் விரிவாக விளக்கட்டுள்ளது.

மனித வியாபாரத்தைத் தடுப்பதற்கென பல சர்வதேச சமவாயங்களும் தேசிய சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதிலும், குற்றத்தினை இழைப்போரைச் சட்டத்தின் முன் நிறுத்துவது ஒப்பீட்டளவில் குறைவாகவேயுள்ளது. புலன்விசாரணையிலும் சாட்சியங்களைச் சேகரிப்பதிலும் காணப்படும் சவால்கள், பாதிக்கப்பட்டவரைப் பாதுகாத்தல் மற்றும் சட்டத் தாமதங்கள் உள்ளிட்ட பல காரணங்களினால் இது நிகழ முடியும். குற்றவியல் நீதி முறைமையினுள் மனித வியாபாரம் செய்வதற்கு பதிற்செயற்பாடாற்றுகையில் எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளிலும் முதன்மையானதாக மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவரின் நலன்கள் பிரதானமாக இருக்கவேண்டும். மனித வியாபாரம் செய்பவர்களுக்கு எதிராக வெற்றிகரமாகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் கடத்தலினால் பாதிக்கப்பட்டவர்களின் மனித உரிமைகளைப் பாதுகாத்து ஆதரவளிப்பதற்கும் பாதிக்கப்பட்டவரை மையப்படுத்திய ஒரு குற்றவியல் நீதிமுறை பதிற்செயற்பாடு செயற்திறன்மிக்கதாக உள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது. மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டவரின் நலன்களை முன்னுரிமைப்படுத்தலும் மனித வியாபாரத்தினால் அவர்களுக்கு ஏற்பட்ட மனஅதிர்ச்சி மற்றும் வடுக்கள் நிறைந்த அனுபவத்தில் இருந்து அவர்கள் மீண்டு வருவதற்கு முன்னுரிமை வழங்குவதும் குற்றவியல் வழக்குத் தொடுப்பில் விரும்பப்படும் பெறுபேற்றினைப் பெற்றுத்தர உதவுகின்றன.

4. பாதுகாப்பு மற்றும் உதவிக்கான கோட்பாடுகள்

4.1 அனைத்தையும் உள்ளடக்கிய கோட்பாடுகள்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர் உரிமைகள் சமவாயம் (1991) மற்றும் சிறுவர் மனித வியாபாரம் தொடர்பான அதன் பிரயோகம் ஆகியவற்றின் அமுல்படுத்தலை நிருவகிக்கின்ற அனைத்தையும் உள்ளடக்கிய நான்கு கோட்பாடுகளாவன: பாகுபாடு காட்டாமை (உறுப்புரை 2). பிள்ளையின் நலன் (உறுப்புரை 3). வாழ்வதற்கான, பிழைத்து வாழ்வதற்கான மற்றும் விருத்திக்கான உரிமை (உறுப்புரை 6) மற்றும் பங்கேற்புக்கான உரிமை (உறுப்புரை12).

மனித வியாபாரம் செய்வதை அடையாளம் கண்டு தடுத்துப் பரிசீலிக்கும் செயன்முறையின்போது பாதிக்கப்பட்டவர் அதிமுக்கிய பங்கினை வகிக்கின்றார். பாதிக்கப்பட்டவர்கள் முதலில் பொறுப்புக் கூறவேண்டியவர்களுக்கு இன்றியமையாத தகவல்களை வழங்கலாம். இத்தகவல்கள் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காகவும் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வதைத் தடுப்பதற்காகவும் வழக்குத் தொடுப்பிற்காகவும் பயன்படுத்தப்படும். பாதிக்கப்பட்டவர் வெற்றிகரமாக ஒத்துழைப்பை வழங்குவதற்கு உதவும் பொருட்டு, தகவலுக்கான உரிமை, இரகசியத்தன்மை, பாதுகாப்பு மற்றும் பாகுபாடின்மை உள்ளிட்ட அவர்களின் அடிப்படை உரிமைகளை அங்கீகரிப்பது முக்கியமானதாகும். பாதிக்கப்பட்டது ஒரு பிள்ளையாக இருப்பின், அதிகாரிகள், பெற்றோர், நெருக்கமான நண்பர்கள் மற்றும் பாதுகாவலர்கள் ஆகியோர் பிள்ளையின் நலனையே கருத்திற்கொண்டு செயற்படவேண்டுமென்பதுடன் பிள்ளையின் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கவேண்டும். பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டைத் தாக்கல் செய்வதற்கு அப்பிள்ளைக்கு உதவி வழங்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவரின் குடும்ப உறுப்பினரோ அல்லது பாதுகாவலரோ அல்லது நெருக்கமான நண்பரோ அல்லது இந்த விடயத்தை அறிந்திருக்கும் வேறு எவரேனும் ஒருவரோ பிள்ளையின் சார்பில் மனித வியாபாரம் தொடர்பான ஒரு முறைப்பாட்டைப் பதிவுசெய்ய முடியும். தேவையெனின் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்த நபரின் அடையாளம் இரகசியமாகப் பேணப்படலாம்.

மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைக்கு உதவியும் பாதுகாப்பும் வழங்குகையில் ஏற்று நடைமுறைப்படுத்தப்படவேண்டிய அணுகுமுறைகள்



4.1.1 உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை

பாதிக்கப்பட்ட பிள்ளை தொடர்பாக எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளும் பிரயோகிக்கத்தக்க மனித உரிமைகள் நியமங்களினால் வழிகாட்டப்பட வேண்டும், குறிப்பாக, பிள்ளையின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சமவாயத்தில் (CRC) எடுத்து விளக்கப்பட்டிருக்கும் பிள்ளையின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவற்றுக்கு மதிப்பளித்தல் என்பன தொடர்பான கோட்பாடுகளினால் வழிகாட்டப்பட வேண்டும். சமவாயத்தில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் உரிமைகளை அனுபவிப்பது ஓர் அரசின் பிரஜைகளாக இருக்கும்

சிறுவர்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதல்ல, ஆனால் மனித வியாபாரத்துக்குப் பலியான சிறுவர்கள் உள்ளடங்கலாக, அச்சிறுவர்களின் தேசியம், குடிவரவு நிலை அல்லது நாடற்ற நிலை என்பவற்றினைப் பொருட்படுத்தாது அனைத்துச் சிறுவர்களுக்கும் கட்டாயம் கிடைக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

மேலும், மனித உரிமைகள் மற்றும் மனித வியாபாரம் தொடர்பான பரிபூரணமான கோட்பாடுகளும் வழிகாட்டுதல்களும் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகத்தினால் (OHCHR) பரிந்துரைக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்டுள்ளன.[3] இவை மனித வியாபாரம் செய்வதைத் தடுத்தல் மற்றும் கடத்தலினால் பாதிக்கப்பட்டவருக்குப் பாதுகாப்பு வழங்கல் தொடர்பாக நடைமுறை ரீதியானதும் உரிமைகளை அடிப்படையாகக் கொண்டதுமான கொள்கை வழிகாட்டலை வழங்கும் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ளன. மனித வியாபாரம் செய்வதற்கு எதிரான தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச சட்டங்கள், கொள்கைகள்: மற்றும் தலையீடுகள் என்பவற்றுக்குள் மனித உரிமைகள் அணுகுமுறையொன்றை மேம்படுத்தி, வசதிப்படுத்தி, ஒருங்கிணைப்பதே இதன் குறிக்கோளாகும். பிள்ளையின் உரிமைகள் தொடர்பான சமவாயம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் வழிகாட்டுதல்கள் என்பன சிறுவர்களைக் கொண்டு மனித வியாபாரம் செய்தல் தொடர்பாகவும் அதனால் பாதிக்கப்படுவர்கள் தொடர்பாகவும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக அனைத்து பங்குதாரர்களுக்கும் தலையீடுகளை மேற்கொள்வதற்கான ஓர் அடிப்படையை வழங்குகின்றது.

1. <u>பிள்ளையின் நலன்கள்</u> - பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளும் - அவை அரசாங்கத்தின் அல்லது தனியார் துறையின் சமூக நலன்புரி நிறுவனங்களினால், பொலிசாரால், நீதிமன்றங்களினால், நிர்வாக அதிகாரிகளினால் அல்லது சட்டவாக்க அமைப்புக்களினால் மேற்கொள்ளப்பட்டாலும் சரி - சிறுவர்களின் நலன்களே அடிப்படைக் கரிசனைக்குரியதாக இருக்கவேண்டும்.

2. <u>பாகுபாடு காட்டப்படாமைக்கான உரிமை</u>: ஒவ்வொரு பிள்ளையும் குடிவரவு நிலை உள்ளடங்கலாக, இனம், பால், மொழி, மதம், இனத்துவம் அல்லது சமூக மூலம், பிறப்பு, அல்லது ஏனைய அந்தஸ்து என்பவற்றின் அடிப்படையில் எத்தகைய பாகுபாட்டுக்கும் உட்படாது பராயமடையாதவர் எனும் அப்பிள்ளையின் அந்தஸ்தினால் அவசியமாக்கப்படுகின்ற பாதுகாப்பு நடவடிக்கைளுக்கான உரிமையைக் கொண்டுள்ளது.

[3] https://www.ohchr.org/Documents/Publications/Traffickingen.pdf

3. பிள்ளையின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்: பிள்ளையின் வயது மற்றும் முதிர்ச்சி ஆகியவற்றுக்கு அமைவாகப் பிள்ளையின் கருத்துக்கள் கோரப்பட்டு அவற்றிற்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படும். சட்டச் செயன்முறை, இடைக்காலப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு, உறுதியான ஒரு தீர்வை இணங்காணுதல் மற்றும் அமுல்படுத்தல் என்பன தொடர்பாகப் பிள்ளையின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் நிலை பேணப்படும் என்பதுடன் பிள்ளையை அதன் சொந்தக் குடும்பத்திற்கு, சொந்த நாட்டிற்கு அல்லது சொந்தப் பிராந்தியத்திற்குத் திருப்பியனுப்புவது தொடர்பான தீர்மானங்களிலும் பிள்ளையின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்படுதல் வேண்டும்.

4. தகவல்களைப் பெறுவதற்கான உரிமை – பாதிக்கப்பட்டிருக்கும் பிள்ளைகளுக்கு அவர்களின் பாதுகாப்புப் பொறிமுறைகள், அவர்களுக்கு கிடைக்கக்கூடிய ஏனைய சேவைகள், அவர்களின் குடும்பத்துடன் மீளிணைதல் மற்றும் / அல்லது அவர்களின் நாட்டுக்கே மீண்டும் அனுப்பப்படல் உள்ளிட்ட அவர்களின் நிலைமைகள் மற்றும் உரிமைகள் பற்றிய அணுகக்கூடிய தகவல்கள் வழங்கப்படும். பாதிக்கப்பட்டிருக்கும் பிள்ளைகள் புரிந்துகொள்ளக்கூடிய மொழியிலேயே இத்தகவல்கள் வழங்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டிருக்கும் பிள்ளை விசாரணைக்குட்படுத்தப்படுகையில் அல்லது நேர்காணப்படுகையில் அல்லது அப்பிள்ளை வேண்டுகோள் விடுக்கையில் பொருத்தமான உரைபெயர்ப்பாளர்கள் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட வேண்டும்.

5. இரகசியம் பேணுவதற்கான உரிமை – பாதிக்கப்பட்டிருப்பவரினதும் அவரின் குடும்பத்தவரதும் பத்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காகப் பாதிக்கப்பட்டிருக்கும் பிள்ளைகளின் இரகசியத்தன்மை மற்றும் அடையாளங்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும். பாதிக்கப்பட்டுள்ள பிள்ளையினை அல்லது பிள்ளையின் குடும்ப உறுப்பினர்கள் அடையாளம் காண்பதற்கு உதவக்கூடிய பெயர், முகவரி மற்றும் ஏனைய தகவல்களைப் பொதுமக்களுக்கோ அல்லது ஊடகங்களுக்கோ வெளிக்கூறக்கூடாது. இதில் சமூக ஊடகங்கள் ஊடாகவும் ஏனைய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் செயலிகள் ஊடாகவும் தளங்கள் ஊடாகவும் தகவல்கள் வெளிக்கூறப்படுவதைத் தடுத்தலும் உள்ளடங்குகின்றது.

6. பாதுகாக்கப்படுவதற்கான உரிமை – பாதிக்கப்பட்டிருக்கும் பிள்ளைகள் அவர்கள் சிறுவர்கள் என்ற ரீதியிலும் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் என்ற ரீதியிலும் அவர்களின் தனித்துவமான உரிமைகள் மற்றும் தேவைகளுக்கு அமைவாக விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கான உரிமையைக் கொண்டுள்ளனர்.

4.1.2 பாதிக்கப்பட்டவரை மையப்படுத்திய அணுகுமுறை

மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான சகல விடயங்களும் செயல்விதிகளும் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்தியதாக இருக்கவேண்டும். பாதிக்கப்பட்டவர்களினதும் அவர்களது குடும்பத்தினரதும் பாதுகாப்பும் அவர்கள் பற்றிய தகவல்களின் இரகசியத்தன்மையும் இதன் போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் பாகுபாடற்ற அடிப்படையில் மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் பிரயோகிக்கப்பட வேண்டும் என்பதுடன் நிபுணத்துவம் பெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்திறன்மிகு ஒத்துழைப்பு மூலம் மேற்கொள்ளப்படுபவை உள்ளடங்கலாகப் பாதிக்கப்பட்டவர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு நெகிழ்வுத் தன்மை மிக்கவையாகவும் தகவமைக்கக் கூடியவையாகவும் நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

பின்வருவனவற்றினை இது அவசியமாக்குகின்றது:

- பாதிக்கப்பட்டவர் குற்றமிழைத்தவராக நடத்தப்படக் கூடாது. அவர் குற்றச் செயல் ஒன்றினால் பாதிக்கப்பட்டவர் என்ற விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்.

- உதவி வழங்கும் அதிகாரிகளினால் பாதிக்கப்பட்டவர் மீண்டும் பாதிப்புக்குள்ளாக்கப்படக் கூடாது.

- மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் அனைத்துச் சேவைகளும் பாதிக்கப்பட்டவர் அறிந்த நிலையில் வழங்கும் இணக்கத்தின் பேரிலேயே வழங்கப்பட வேண்டும்.

- பாதிக்கப்பட்டவர் தொடர்பான அனைத்துத் தகவல்களும் தொடர்பாடல்களும் அவரின் அந்தரங்கம் மற்றும் இரகசியத் தன்மை என்பவற்றுக்கான உரிய மரியாதையுடன் கையாளப்படுதல் வேண்டும்.

4.1.3 பல்துறை சார் அணுகுமுறை

சிறுவர்களை மனித வியாபாரத்தில் ஈடுபடுத்துவது என்பது அதன் தன்மையில் பன்முகத்தன்மை கொண்டது. இந்தச் சிக்கலான தன்மையே மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் உதவி என்பவற்றை மேம்படுத்துவதில் வெவ்வேறு அமைப்புக்களைச் சேர்ந்த / நிறுவனங்களைச் சேர்ந்த தொழில் ரீதியானவர்கள் சம்பந்தப்படுவதை அவசியமாக்குகின்றது. பல்துறைசார் அணுகுமுறை என்பதன் அர்த்தம், பல்வேறு துறைகளைச் சேர்ந்த இந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஒன்றுசேர்ந்து பாதிக்கப்பட்டிருக்கும் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு மற்றும் உதவி என்பவற்றை

வழங்குவதற்கான மிகச் சிறந்த வழிமுறைகளை கண்டறிவதற்கெனத் தமது முயற்சிகளை ஒருங்கிணைப்பதாகும். இந்த நியம செயற்படு முறைகளின் குறிக்கோள் இச்செயன்முறைக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதாகும்.

4.1.4 சமூக அடிப்படையிலான அணுகுமுறை

பாதிக்கப்பட்டவருக்கான பாதுகாப்பு மற்றும் உதவி தொடர்பான பராமரிப்புத் திட்டங்களை உருவாக்கும் விடயத்தில் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள், அவர்களின் பெற்றோர் / பாதுகாவலர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோர் சம்பந்தப்படுவதனைச் சகல சேவைகளும் உறுதிப்படுத்த வேண்டும். இது உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையுடனும் பாதிக்கப்பட்டவரை மையப்படுத்திய அணுகுமுறையுடனும் பிரிக்கமுடியாத விதத்தில் பிணைக்கப்பட்டுள்ளது. சேவை வழங்குநர்கள் பாதிக்கப்பட்டவர்களின் இரகசியத் தன்மையினைப் பேணிவருகின்ற அதேவேளை அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சமுதாய மட்ட உதவிகளிலும் கவனம் செலுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவுவதன் இறுதியான இலக்கு நீண்டகால நிறுவனமயமாக்கலை விட அச்சிறுவர்களைச் சமுதாயத்துடன் மீள ஒருங்கிணைப்பதாகவே இருக்க வேண்டும்.

4.2 சிறுவர் மனித வியாபாரத்தின் வரைவிலக்கணம்

தனிப்பட்ட நபரொருவர் உண்மையிலேயே மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு பிள்ளையா என்பதைத் தீர்மானிப்பதற்கு "சிறுவர் மனித வியாபாரம்" என்பதன் சட்டரீதியான வரைவிலக்கணம் என்ன குறிப்பிடுகின்றது என்பதைப் புரிந்துகொள்வது அவசியமானதாகும். அடையாளப்படுத்தல் செயன்முறைக்கு உதவும் பொருட்டு "சிறுவர்கள் சம்பந்தப்படும் மனித வியாபாரம்" என்ற பதத்திற்கான சர்வதேச வரைவிலக்கணத்தையும் உள்நாட்டு வரைவிலக்கணத்தையும் அதிகாரிகள் கவனத்திலெடுக்க வேண்டும்.

தேசங்கடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்தைக் (2000) குறைநிரப்புச் செய்யும், ஆட்களை - குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களை – மனித வியாபாரத்தில் ஈடுபடுத்துவதைத் தடுப்பதற்கான, கட்டுப்படுத்துவதற்கான மற்றும் தண்டிப்பதற்கான ஐக்கிய நாடுகள் மரபொழுங்கின் (இதனகத்துப் பின்னர் ஐ நா **TIP** மரபொழுங்கு 2000 அல்லது **"Palermo** மரபொழுங்கு**"** என அழைக்கப்படும்) உறுப்புரை 3 **(c)** சிறுவர்கள் சம்பந்தப்படும் மனித வியாபாரத்தை பின்வருமாறு வரைவிலக்கணம் செய்கின்றது:

''சுரண்டல் நோக்கத்திற்காக ஒரு பிள்ளையை ஆட்சேர்ப்புச் செய்தல், ஏற்றி இறக்கல், இடமாற்றுதல், இடங்கொடுத்தல் அல்லது பெற்றுக்கொள்ளல் ஆகியவை இந்த உறுப்புரையின் உபபந்தி *(a)* இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வழிவகைகளில் ஏதேனும் ஒன்றுடன் சம்பந்தப்படாது விட்டாலும் கூட, ''மனித வியாபாரமாகவே'' கருதப்படும்.

செயற்பாடு		நோக்கம்		
ஆட்சேர்ப்பு செய்தல் கொண்டு செல்லுதல் இடம்மாற்றுதல் அடைக்கலம் அளித்தல் ஆட்களைப் பெற்றுக் கொள்ளல்	+	விபச்சாரத்தில் ஈடுபடுத்துதல் பாலியல் துஷ்பிரயோகம் கட்டாய ஊழியம் அடிமைத்துவம் அல்லது அதனை ஒத்த நடவடிகடகைகள் பிரதான உறுப்புக்களை அகற்றல் வேறு வகையான சுரண்டல்கள்	=	சிறுவர் மனித வியாபாரம்

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் வரைவிலக்கணத்தின் பிரகாரம், சிறுவர் மனித வியாபாரம் தொடர்பான சம்பவம் பற்றிய தீர்மானத்திற்கு வருவதற்கு, 'செயலின்' கூறுகளும் சுரண்டல்மிகு நோக்கமும் மாத்திரமே நிரூபிக்கப்பட வேண்டும் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். வளர்ந்தோரைப் பொறுத்த அளவில் இணக்கத்தினைப் பெறப் பயன்படுத்தப்பட்ட 'வழிமுறைகளை' நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை.

மனித வியாபார சம்பவம் ஒன்றை அடையாளம்காண உதவுவதற்குக் குறிகாட்டிகளைத் தேடுவது பயன்மிக்கதாகும். இக்குறிகாட்டிகளில் சில பாதிக்கப்பட்டவர்களினால் வெளிப்படுத்தப்படும் தெளிவான மற்றும் புலப்படக்கூடிய அறிகுறிகளாக இருக்கின்றன. உதாரணமாக, பாதிக்கப்பட்டவர்கள் தாம் தமது விருப்பத்திற்கு எதிராக வேலை செய்து வருகின்றனர் என்ற நம்பிக்கையினை வெளிப்படையாக வெளிப்படுத்த முடியும். ஏனைய குறிகாட்டிகள் பெருமளவுக்கு வெளியில் தென்படுவதில்லை என்பதுடன் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் வரை வெளிக்கூறப்படுவதில்லை. பாதிக்கப்பட்ட ஒருவர் மனித வியாபாரத்திற்குள்ளாகியிருக்கின்றாரா அல்லது மனித வியாபாரம் செய்வதற்கான சூழ்நிலை நிலவுகின்றது என உத்தியோகத்தர் சந்தேகிக்கப்படுகின்றாரா என்பதைத் தீர்மானிப்பதற்கு குறிகாட்டிகளின் ஆரம்ப அடையாளப்படுத்தல் முக்கியமானதாகும். ஆரம்பக் குறிகாட்டிகள் இருப்பதோ அல்லது இல்லாமல் இருப்பதோ மனித வியாபார சம்பவம் நிரூபிக்கப்பட்டுள்ளது அல்லது நிரூபிக்கப்படவில்லை என்பதனைக் குறிக்காது. ஒட்டுமொத்த மதிப்பீட்டுச் செயன்முறைக்கு உதவும் நோக்கத்திற்காகவே குறிகாட்டிகள் உள்ளன என்பதுவும் அவை பொதுமைப்படுத்தல்களாகும் என்பதுவும் அனைத்துக் குறிகாட்டிகள் தொடர்பாகவும் விதிவிலக்குகள் உள்ளன என்பதுவும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். எந்த ஒரு குறிகாட்டியுமே

தனித்து ஒரு பதிலை முன்வைக்காது என்பதானல் அனைத்துக் குறிகாட்டிகளும் கூட்டாகக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். வரைவிலக்கணத்துடன் சேர்ந்து, மனித வியாபாரம் செய்தலையும் அதன் காரணமாகப் பாதிக்கப்பட்டிருப்பவர்களையும் அடையாளம் காணும் செயன்முறையில் குறிகாட்டிகள் உதவுகின்றன.

4.3 சர்வதேசச் சட்டக் கட்டமைப்பு

சிறுவர் மனித வியாபாரம் எனும் பிரச்சினையினைத் தீர்ப்பதற்கான சர்வதேசச் சட்டக் கட்டமைப்பில் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சமவாயம் 1989, மிகமோசமான சிறார் ஊழியத்தின் வடிவங்கள் பற்றிய சர்வதேச தொழில் தாபனத்தின் சமவாயம் 1999, ஆகக்குறைந்த வயது பற்றிய சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் சமவாயம் (C138) 1973 மற்றும் மனித வியாபாரம் - குறிப்பாகப் பெண்கள் மற்றும் சிறுவர்கள் ஆகியோரை மனித வியாபாரம் செய்தலைத் தடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் தண்டித்தல் தொடர்பான ஐக்கிய நாடுகள் மரபொழுங்குகள் (2000) ஆகியவை உள்ளடங்குகின்றன. சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான சமவாயத்திற்கான தெரிவுக்குரிய இரு மரபொழுங்குகள் உள்ளன. அவை, சிறுவர்களை விற்பதையும் பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவதையும் ஆபாசப் படங்களில் பயன்படுத்துவதையும் தடுக்குமாறு அரசுகளைக் கோருகின்றன 2000 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் உத்தியோகபூர்வமாக நிறைவேற்றப்பட்ட சிறுவர்களை விற்பனை செய்தல், சிறுவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்துதல் மற்றும் சிறுவர்களை ஆபாசப் படங்களில் பயன்படுத்துதல் தொடர்பான தெரிவுக்குரிய மரபொழுங்கும் 2000 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையினால் நிறைவேற்றப்பட்ட ஆயுத மோதல்களில் சிறுவர்களை ஈடுபடுத்துவது தொடர்பான விருப்புக்குரிய மரபொழுங்கும் ஆகும்.

4.3.1 சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான ஐ. நா. சமவாயம் 1989

சிறுவர்கள் விசேட பராமரிப்பினையும் உதவியினையும் பெற்றுக்கொள்வதற்கான உரித்தினைக் கொண்டுள்ளனர் எனச் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள புரிதலைச் சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயம் (1948) வலியுறுத்துகின்றது. மேலும், இச் சமவாயத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு "ஒரு பிள்ளை அதன் உடல் ரீதியான மற்றும் உள ரீதியான முதிர்ச்சியின்மை காரணமாகப் பிறப்புக்கு முன்னரும் பிறப்பின் பின்னரும் பொருத்தமான சட்டப் பாதுகாப்பு உள்ளிட்ட விசேட பாதுகாப்புக்கள் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றுக்கான தேவையினையும் கொண்டுள்ளது".

பிள்ளையின் பூரணமானதும் இணக்கமானதுமான ஆளுமை விருத்தியடைவதற்காகப் பிள்ளை குடும்பச் சூழலிலும் மகிழ்சி, அன்பு மற்றும் புரிதல் நிறைந்த சூழலிலும் வளர வேண்டும் என்பதை இச்சமவாயம் அங்கீகரிக்கின்றது. எனவே குடும்பமானது சமூகத்தின் அடிப்படைக் குழுமம் என்ற ரீதியிலும் குடும்ப உறுப்பினர்களின், குறிப்பாக சிறுவர்களின்

வளர்ச்சிக்கும் நலனோம்புகைக்குமான இயற்கைச் சூழல் என்கின்ற ரீதியிலும் அதற்குத் தேவையான பாதுகாப்பு மற்றும் உதவி ஆகியவை வழங்கப்பட வேண்டும். இதனால் சமூகத்தினுள் அதன் பொறுப்புக்களைக் குடும்பத்தினால் முழுமையாக நிறைவேற்றக்கூடியதாக இருக்கும்.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களை அடைவதற்காகச் சமவாயம் பிள்ளையின் அடிப்படை உரிமைகளை நிர்ணயிப்பதுடன் சிறுவர்களுடன் பணியாற்றுவதற்காக சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களையும் அடிப்படையினையும் வழங்குகின்றது.

4.3.2 மனித வியாபாரத்தை குறிப்பாகப் பெண்கள் மற்றும் சிறுவர் மனித வியாபாரத்தைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் தண்டிப்பதற்குமான ஐக்கிய நாடுகள் மரபொழுங்கு 2000

மனித வியாபாரம் செய்தல் தொடர்பான மிகவும் பூரணமானதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதுமான வரைவிலக்கணத்தை ஐக்கிய நாடுகள் சமவாயம் முன்வைக்கின்றது. மேலும் அது மனித வியாபாரத்தைத் தடுப்பதற்கும் அதனால் பாதிக்கப்படுபவர்களைப் பாதுகாப்பதற்கும் மற்றும் அக்குற்றச் செயலை இழைத்திருப்பவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதற்காக அரசுகள் பின்பற்ற வேண்டிய ஏற்பாடுகளை முன்வைக்கின்றது.

ஐக்கிய நாடுகள் மரபொழுங்கின் உறுப்புரை 3 ''மனித வியாபாரத்தை'' பின்வருமாறு வரைவிலக்கணம் செய்கின்றது:

'மனித வியாபாரம்' (*Trafficking in persons*) என்பதன் பொருள் சுரண்டல் நோக்கத்திற்காக, அச்சுறுத்தல் மூலம், பலத்தினைப் பிரயோகிப்பதன் மூலம் அல்லது ஏனைய வடிவிலான பலவந்தத்தினைப் பிரயோகிப்பதன் மூலம், கடத்தலின் மூலம், மோசடி மூலம், ஏமாற்றுதல் மூலம், அதிகாரத்தினை அல்லது பதவியினை அல்லது பாதிப்புறுநிலையினைத் துஷ்பிரயோகம் செய்வதன் மூலம், மற்றொரு நபரின் மீது கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ள நபரின் இணக்கத்தினைப் பெறுவதற்காகக் கொடுப்பனவினை அல்லது நலன்களை வழங்குவதன் மூலம் அல்லது பெறுவதன் மூலம் ஆட்களை ஆட்சேர்ப்புச் செய்தல், ஏற்றி இறக்கல், இடமாற்றுதல், இடங்கொடுத்தல் அல்லது பெற்றுக்கொள்ளல் என்பதாகும்.

''சுரண்டல் என்பது குறைந்தது பின்வருவனவற்றை உள்ளடக்கும்: ஏனையோரின் பாலியல் தொழிலினைச் சுரண்டுதல் அல்லது பாலியல் சுரண்டலின் ஏனைய வகைகள், கட்டாய ஊழியம் அல்லது சேவைகள், அடிமைத்தளை அல்லது அதற்கு ஒப்பான நடைமுறைகள் அல்லது மட்டற்ற கீழ்ப்படிவு அல்லது உடல் உறுப்புக்களை அகற்றுதல்.''

மேலே கலந்துரையாடப்பட்டவாறு, உறுப்புரை 3 இ, ''சிறுவர் மனித வியாபாரத்தின் வரைவிலக்கணத்தினை வழங்குகின்றது.

4.3.3 சிறுவர்களை விற்பனை செய்தல், சிறுவர் பாலியல் தொழில் மற்றும் சிறுவர் ஆபாசப் படங்கள் பற்றிய தெரிவுக்குரிய மரபொழுங்கு 2000 (OPSC)

சிறுவர்களைப் பாலியல் ரீதியாகச் சுரண்டுவதற்கு எதிரான சிறுவர் உரிமை பற்றிய சமவாயத்தின் ஏற்பாடுகளைத் தெரிவுக்குரிய மரபொழுங்கு வலியுறுத்துகின்றது. இந்தச் சமவாயத்தின் கீழ் சகல அரசு தரப்புக்களும் 18 வயதிற்குக் குறைந்த அனைத்துச் சிறுவர்களையும் அனைத்து வடிவிலான பாலியல் சுரண்டல்களிலிருந்தும் பாதுகாப்பதற்கான கடப்பாட்டினையும் சிறுவர்களை விற்பனை செய்தல், சிறுவர் பாலியல் தொழில் மற்றும் சிறுவர்களை ஆபாசப் படங்களில் பயன்படுத்தல் போன்ற செயல்களை குற்றச்செயல்களாக ஆக்குவதற்கான கடப்பாட்டினையும் கொண்டுள்ளன. மேலும், பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோரின் உரிமைகளை உறுதிப்படுத்தவேண்டிய கடப்பாட்டையும் அரசுகள் கொண்டுள்ளன. பாலியல் சுரண்டலுக்கு உள்ளாகியுள்ள ஒரு பிள்ளை, பாலுறவுக்கு இணக்கம் தெரிவிக்கும் சட்டபூர்வமான வயது எதுவாக இருந்தபோதிலும், ஒரு குற்றவாளியாக அல்லாமல் பாதிக்கப்பட்ட ஒருவராகவே கருதப்பட வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட சமவாயம் பின்வருவன உள்ளடங்கலாக அதன் ஏற்பாடுகளுக்கு இணங்கிய விதத்தில் தேசிய சட்டவாக்கம் வினைத்திறன்மிகு முறையில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றது:

- சிறுவர்களை விற்பனை செய்தல், சிறுவர் பாலியல் தொழில் மற்றும் சிறுவர்களை ஆபாசப் படங்களில் பயன்படுத்தல் ஆகிய செயல்களைக் குற்றச்செயல்களாக ஆக்குதல்.
- பிராந்தியங்களுக்கு அப்பாற்பட்ட நியாயாதிக்கத்தை ஸ்தாபித்தல், சிறுவர்களை விற்பனை செய்தல் மற்றும் பாலியல் தொழிலில் பயன்படுத்தல் தொடர்பான சமவாயத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் குற்றச் செயல்களை இழைத்திருப்பவர்களை வழக்கு விசாரணைக்காக நாடுகடத்த வேண்டுமானால், அவ்விதம் அவர் அனுப்பி வைக்கப்படும் நாட்டிலும் அது ஒரு குற்றச் செயலாக இருக்க வேண்டும் (Double Criminality Requirement) என்ற தேவைப்பாட்டினை இல்லாதொழித்தல். இரட்டைக் குற்றத் தேவைப்பாட்டை இல்லாதொழித்தல்.
- இச்சமவாயத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் குற்றச்செயல்களை, குற்றவாளிகளை (வழக்கு விசாரணைக்கென) நாடு கடத்தக்கூடிய குற்றச் செயல்களாக உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- சட்ட ரீதியான நபர்களின் சட்டப் பொறுப்பினை உறுதிப்படுத்துதல்.
- குற்றவியல் நீதிச் செயன்முறையின் அனைத்துக் கட்டங்களின் போதும் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோரின் உரிமைகள் மற்றும் நலன்கள் என்பவற்றைப் பாதுகாத்தல். இது

அவர்களுடைய அந்தரங்கம் மற்றும் தீங்குகளை எதிர்கொள்ளாத நிலை, அவர்களுடைய கருத்துக்கள், தேவைகள் என்பவற்றை கவனத்தில் எடுத்தல் என்பவற்றையும் உள்ளடக்குகின்றது.

- சம்பந்தப்பட்ட தீர்மானங்களிலும், நடவடிக்கை முறைகளிலும் சிறுவர்களின் மிகச் சிறந்த நலன்கள், பங்கேற்பு என்பவற்றைப் பாதுகாத்தல்; மற்றும் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்கள் மீட்பு, மீள் ஒருங்கிணைப்பு மற்றும் நட்டஈடு என்பவற்றுக்கான அவர்களுடைய உரிமையையும் உள்ளடக்கிய விதத்தில் சிறுவர்களுக்கு பொருத்தமான உதவியை உறுதிப்படுத்துதல்.
- சிறுவர்களை விற்பனை செய்தல், பாலியல் தொழிலில் பயன்படுத்தல் மற்றும் ஆபாசப் படங்களில் பயன்படுத்துதல் என்பன தொடர்பான தெரிவுக்குரிய மரபொழுங்கில் உள்ளடக்கப்பட்டிருக்கும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கும், கவனத்தில் எடுப்பதற்குமென சிறுவர்களுடன் மற்றும் சிறுவர்களுக்காக பணியாற்றி வரும் தொழிவாண்மையாளர்களின் ஆற்றலை பலப்படுத்துதல்.
- மேலே குறிப்பிடப்பட்ட தெரிவுக்குரிய மரபொழுங்கில் உள்ளடக்கப்பட்டிருக்கும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான வழிமுறைகள் மற்றும் அதன் தீங்கிழைக்கக்கூடிய பாதிப்புக்கள் என்பன தொடர்பாக தகவல், கல்வி, பயிற்சி என்பவற்றுக்கு ஊடாக சிறுவர்களையும் உள்ளடக்கிய விதத்தில் பொதுமக்களுக்கு மத்தியில் விழிப்புணர்வை தூண்டுதல்.
- சிறுவர்களை விற்பனை செய்தல், பாலியல் தொழிலில் பயன்படுத்தல் மற்றும் ஆபாசப் படங்களில் பயன்படுத்துதல் என்பன தொடர்பான தெரிவுக்குரிய மரபொழுங்கை அமுல்படுத்துவதற்கென எல்லை தாண்டிய சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி என்பவற்றை மேம்படுத்துதல்
- சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான குழுவிற்கு அறிக்கைகளை அனுப்பிவைக்க வேண்டிய அரச தரப்புக்களின் கடப்பாடுகளுக்கு மதிப்பளிக்கும் நிலையை மேம்படுத்தல். குழுவின் முடிவுக் குறிப்புக்கள் சிறுவர் உரிமைகளுக்கான பணிப்பாணைகளை வைத்திருப்பவர்களுக்கான பரிந்துரைகள் என்பன தொடர்பான தொடர் நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

4.3.4 மிக மோசமான சிறார் ஊழிய வகைகள் தொடர்பான சர்வதேச தொழில் தாபனத்தின் சமவாயம் (C 182) 1999

மிக மோசமான சிறார் ஊழிய வகைகள் பற்றிய சமவாயம் எனச் சுருக்கமாக அறியப்படும் இச்சமவாயம் மிக மோசமான சிறார் ஊழிய வகைகளைத் தடைசெய்தல் மற்றும் அவற்றை இல்லாதொழிப்பதற்காக உடனடியாக நடவடிக்கை எடுத்தல் தொடர்பான சமவாயம் எனச் சர்வதேச தொழில் தாபனத்தினால் (ILO) 1999ஆம் ஆண்டில் சர்வதேச தொழில் தாபன சமவாயம் இல. 182 என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்டது. ஒரு நாடு இந்த இல.

182 சமவாயத்தை அத்தாட்சிப்படுத்துவதன் மூலம் மிக மோசமான சிறார் ஊழிய வடிவங்களைத் தடைசெய்வதற்கும் இல்லாதொழிப்பதற்கும் உடனடி நடவடிக்கை எடுப்பதற்கென தன்னை அர்ப்பணித்துக் கொள்கின்றது.

உறுப்புரை 3 - "மிக மோசமான சிறார் ஊழிய வகைகள்" என்ற பதத்துக்கு பின்வரும் விதத்தில் வரைவிக்கணம் வழங்குகின்றது:

(a) அனைத்து வடிவங்களிலுமான அடிமைத்தளை அல்லது அதற்கு ஒப்பான நடைமுறை, சிறுவர்களை விற்பனை செய்தல் மற்றும் மனித வியாபாரம் செய்தல், அடிமைத்தளை, பிணிப்பு மற்றும் பலாத்காரமான அல்லது கட்டாய உழைப்பு மற்றும் ஆயுத மோதலில் பயன்படுத்துவதற்காச் சிறுவர்களைப் பலாத்காரமாக அல்லது கட்டாயமாக ஆட்சேர்ப்புச் செய்தல் என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் பலவந்தமான அல்லது கட்டாய உழைப்பு.

(b) ஆபாசப் படத் தயாரிப்புக்கென அல்லது ஆபாசச் செயற்பாடுகளில் ஈடுபடுத்திக் கொள்வதற்கென சிறுவர்களை பயன்படுத்துதல், பெற்றுக்கொள்ளல் மற்றும் வழங்குதல்.

(c) குறிப்பாக சம்பந்தப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்களில் வரையறை செய்யப்பட்டிருக்கும் விதத்தில் போதைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் கடத்தல் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் சட்ட விரோதமான நடவடிக்கைகளுக்கென சிறுவர்களை பயன்படுத்துதல், பெற்றுக்கொள்ளல் அல்லது வழங்குதல்.

(d) அதன் இயல்பில் அல்லது அது மேற்கொள்ளப்பட்டு வரும் சந்தர்ப்ப சூழ்நிலைகளில் சிறுவர்களின் சுகாதாரம், பாதுகாப்பு அல்லது ஒழுக்கநெறிகள் என்பவற்றுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய வேலை.

4.3.5. குறைந்தபட்ச வயது தொடர்பான சர்வதேச தொழில் தாபனத்தின் சமவாயம் (C 138) 1973

இச்சமவாயம் தொழில் அல்லது வேலை என்பவற்றுக்கு சேர்த்துக் கொள்வதற்கான பொதுவான, குறைந்தபட்ச வயதை 15 வருடங்களாகவும், (எளிதான வேலைகளுக்கு 13 வருடங்கள்) ஆபத்தான வேலைகளுக்கான குறைந்தபட்ச வயதை 18 வயதாகவும் (ஒரு சில கண்டிப்பான நிபந்தனைகளின் கீழ் 16 ஆகவும்) நிர்ணயிக்கின்றது.

உறுப்புரை 7 தேசிய சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகள் பின்வரும் எளிதான வேலைகள் தொடர்பாக 13 தொடக்கம் 15 வயது வரையான ஆட்களை தொழிலில் அல்லது வேலையில் ஈடுபடுத்த முடியுமென விதந்துரைக்கின்றது –

(a) அவரது சுகாதாரம் அல்லது அபிவிருத்தி என்பவற்றுக்கு தீங்கு விளைவிக்காத தொழில்கள் அல்லது வேலைகள்; மற்றும்

(b) அவர்கள் பாடசாலைக்குச் சமூகமளித்தல், தகைமைவாய்ந்த அதிகார சபையொன்றினால் அனுமதி வழங்கப்பட்டிருக்கும் தொழிற்பயிற்சி வழிகாட்டல் அல்லது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றல் அல்லது பெற்றுக்கொண்ட அறிவுறுத்தலில் இருந்து நன்மையடைவதற்கான ஆற்றல் ஆகியவற்றினைப் பாதிக்கலாகாது.

4.3.6 பாலியல் தொழிலுக்காகப் பெண்கள் மற்றும் சிறுவர்களை மனித வியாபாரம் செய்தலைத் தடுத்து நிறுத்தல் மற்றும் அதற்கு எதிராகல் பற்றிய சார்க் (SAARC) சமவாயம் (2002)

உறுப்புரை 2- பெண்கள் மற்றும் சிறுவர்களை மனித வியாபாரம் செய்தலைத் தடுத்தல், இடைநிறுத்துதல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான பல்வேறு அம்சங்களையும் உறுப்பு அரசுகள் வினைத்திறனுடன் கையாள்வதற்காகவும் மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டவர்களை அவர்களின் சொந்த நாடுகளுக்கு மீண்டும் அனுப்பிவைப்பதற்காகவும் அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்காகவும் சர்வதேசப் பாலியல் வலையமைப்புக்களில் பெண்களும் சிறார்களும் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்காகவும், குறிப்பாக, சார்க் பிராந்திய நாடுகளே இதன் மூல நாடுகளாகவும் இடைமாற்ற நாடுகளாகவும் சேரிட நாடுகளாகவும் இருக்குமிடத்து அதனைத் தடுப்பதற்காகவும் உறுப்பு அரசுகளுக்கு மத்தியில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதே இந்தச் சமவாயத்தின் நோக்கமாகும்.

இலங்கையில் மனித வியாபாரம் செய்வதைத் தடுத்து நிறுத்துவதற்காகவும் பிராந்தியத்தைச் சேர்ந்த உறுப்பு அரசுகளுக்கிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்குச் செயலூக்கமளிப்பதற்காகவும் சட்டவாக்கமாக அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், தற்பொழுது இச்சட்டம் செயற்படாதிருப்பதுடன் அதன் வரையறைகளை அகற்றுவதற்காகத் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாகக் கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது.

4.4 இலங்கையின் சட்டக் கட்டமைப்பு

மனித வியாபாரத்தினால் பாதிக்கப்படும் சிறுவர்களுக்குப் பிரயோகிக்கத்தக்க இலங்கையின் உள்நாட்டுச் சட்டவாக்கங்கள் வருமாறு:

- 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்
- 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோருக்கு உதவி மற்றும் பாதுகாப்பு என்பவற்றை வழங்குவதற்கான சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்.
- 1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சிறுவர்கள் மற்றும் இளநபர்கள் கட்டளைச் சட்டம்

- 1995 ஆம் ஆண்டின் சாட்சிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- 1999 ஆம் ஆண்டின் சாட்சிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டம்
- 1998 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவை

4.4.1 'ஆட்களை மனித வியாபாரம்' செய்வது தொடர்பான மனித வியாபாரம் மரபொழுங்கு வரைவிலக்கணத்திற்கு அமைவாக இலங்கை அரசாங்கம் 2006 ஆம் ஆண்டில் தண்டனைச் சட்டக்கோவைக்கு திருத்தங்களை அறிமுகம் செய்தது. இந்தத் திருத்தச் சட்டம் ஆட்களை மனித வியாபாரம் செய்யும் குற்றம் தொடர்பாக மனித வியாபாரம் செய்வது பற்றிய ஐக்கிய நாடுகள் மரபொழுங்கிற்கு அமைவாக முழுமையான ஒரு வரைவிலக்கணத்தை வழங்குகின்றது. குறிப்பாக பிரிவு 360 இ (1) சுருக்கமான வடிவில் பின்வரும் செயல்களை குற்றச் செயல்களாகக் கருதுகின்றது:

(அ) பணத்திற்காக அல்லது வேறு பிரதிபலனுக்காக எந்த ஒரு நபரையும் வாங்குதல், விற்றல், பண்டமாற்றுச் செய்தல் அல்லது வாங்குவதற்கு, விற்பதற்கு, பண்டமாற்றுச் செய்வதற்குத் தூண்டுதல்.

(ஆ) எந்த ஒரு நபரையும் ஆட்சேர்ப்புச் செய்தல், ஏற்றி இறக்கல், இடமாற்றுதல், இடங்கொடுத்தல், பெற்றுக்கொள்ளல் அல்லது பலவந்த ஊழியம் அல்லது கட்டாய ஊழியம் அல்லது சேவைகள், அடிமைத்தளை, அடிமைவேலை, உடல் உறுப்புக்களை அகற்றல், பாலியல் தொழில் அல்லது ஏனைய வடிவிலான பாலியல் சுரண்டல் அல்லது சட்டத்தின் கீழ் குற்றச் செயலாக இருக்கின்ற வேறு ஏதாவது செயல் ஆகியவற்றினைப் பெற்றுக்கொள்வதற்காக அச்சுறுத்தல், பலம், மோசடி, ஏமாற்று அல்லது தூண்டல் அல்லது மற்றொருவரின் பாதிப்புறுநிலையினைச் சுரண்டல் ஆகியவற்றினைப் பயன்படுத்தல்.

(இ) இதே சுரண்டல் நோக்கங்களுக்காக பிள்ளையின் இணக்கத்துடன் அல்லது இணக்கமின்றிப் பிள்ளை ஒன்றினை ஆட்சேர்ப்புச் செய்தல், ஏற்றி இறக்கல், இடமாற்றுதல், இடங்கொடுத்தல், பெற்றுக்கொள்ளல்.

மேலே கலந்துரையாடியவாறு, சர்வதேச மரபொழுங்கின் வரைவிலக்கணத்தின் பிரகாரம் தண்டனை சட்டக் கோவையில் 'சிறுவர் மனித வியாபாரம்' தொடர்பான வரைலவிக்கணம் வழங்கப்பட்டுள்ளது.

பிரிவு 360 இ (1) (இ)

பலவந்த ஊழியம் அல்லது கட்டாய ஊழியம் அல்லது சேவைகள், அடிமைத்தளை, அடிமைவேலை, உடல் உறுப்புக்களை அகற்றல், பாலியல் தொழில் அல்லது ஏனைய வடிவிலான பாலியல் சுரண்டல் அல்லது சட்டத்தின்

கீழ் குற்றச் செயலாக இருக்கின்ற வேறு ஏதாவது செயல் ஆகியவற்றினைப் பெற்றுக்கொள்வதற்காகப் பிள்ளை ஒன்றின் இணக்கத்துடனோ அல்லது இணக்கமின்றியோ அப்பிள்ளையை யாராகிலும் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்கின்றாரோ, ஏற்றி இறக்குகின்றாரோ, இடமாற்றுகின்றாரோ, இடங்கொடுக்கின்றாரோ, பெற்றுக்கொள்கின்றாரோ அவர் மனித வியாபாரம் குற்றத்தினை இழைத்தவராவார்.

பிரிவு 360 இ (3) இன் பிரகாரம் ''பிள்ளை[4]'' என்பது 18 வயதிற்கு குறைவான ஓர் ஆள் என்று பொருள்படும்.

உட்பிரிவு 360 இ (1) (இ)
குற்றத்தைப் புரியும் ஒருவரால் பாதிக்கப்பட்டவர் ஒரு பிள்ளையாக இருப்பின், இப்பிரிவின் பிரகாரம் மனித வியாபாரம் மேற்கொள்ளப்பட்ட 'வழிமுறைகளை' நிரூபிக்க வேண்டிய ஒரு தேவை இருந்து வரவில்லை. ஆள் ஒருவர் 18 வயதிற்கு குறைந்தவராக இருந்து வரும் பொழுது ஒரு 'செயலையும்' மற்றும் சுரண்டலின் 'நோக்கத்தையும்' மட்டுமே நிரூபிப்பது அவசியமாகும்.

பிரிவு 360 இ (2) மனித வியாபாரம் என்னும் தவறுக்கு குற்றவாளியாகும் ஆள் எவரும் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுவதன் மேல் இரண்டு ஆண்டுகளுக்கு குறையாததும், இருபது ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலப் பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், குற்றப் பணத்துடனும் தண்டிக்கப்படலாம். அத்துடன் அத்தகைய ஒரு தவறு சிறுவர்கள் தொடர்பில் புரியப்படுமிடத்து மூன்று ஆண்டுகளுக்கு குறையாததும், இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப் பகுதிக்கு இரு வகையிலொருவகை மறியற் தண்டனையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், குற்றப் பணத்துடனும் தண்டிக்கப்படலாம்.

4.4.2 மனித வியாபாரம் தொடர்பாகத் தண்டனைச் சட்டக் கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏனைய குற்றங்கள்

1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கத் தண்டனைச் சட்டக் கோவை (திருத்தச்சட்டம்)

முதன்மை சட்டவாக்கத்தின் பிரிவு 360 அ இனை பதிலீடுசெய்தல்

முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 360 அ நீக்கப்பட்டு, தவறு தொடர்பான பின்வரும் பிரிவு பதிலீடு செய்யப்பட்டுள்ளது:

[4] இலங்கையின் சட்டங்களில் ''பிள்ளை'' என்ற பதம் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், இங்கு தெளிவு கருதி ''சிறுவர்கள்'' என்ற பதமும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பிரிவு 360 அ நடைமுறைப்படுத்தல்

எவரேனும் ஒருவர்:

(1) எந்த ஒரு வயதையும் சேர்ந்த ஓர் (அந்த ஆளின் சம்மத்துடன் அல்லது சம்மதமின்றி) ஆணையோ அல்லது பெண்ணையோ இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியே ஒரு விபச்சாரியாக நடந்துகொள்ள வைத்தல் அல்லது அவ்வாறு நடக்கவைக்க முயற்சித்தல்;

(2) இலங்கைக்கு வெளியில் இருக்கும் எவரேனும் ஒருவருடன் சட்ட விரோதமாக உடல் உறவு கொள்ளவைக்கும் நோக்கத்துடன் 16 வயதிற்கு குறைந்த எவரையும் அவரின் சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி இலங்கையிலிருந்து செல்வதற்கு உடந்தையாக அல்லது உடந்தையாக இருக்க முயற்சித்தல்; அல்லது அத்தகைய ஒருவரை (அவரின் சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி) குறிப்பிட்ட நோக்கத்திற்காக இலங்கையிலிருந்து அகற்றுதல் அல்லது அகற்றுவதற்கு முயற்சித்தல்;

(3) எந்த வயதினையும் உடைய எவரையும் (அவரின் சம்மத்துடன் அல்லது சம்மதமின்றி) வேறொரு இடத்தில் இருக்கும் ஒரு விபச்சார விடுதியில் தங்கியிருப்பவராக அல்லது அந்த விடுதிக்கு அடிக்கடி சென்று வரக்கூடியவராக ஆக்கும் நோக்கத்துடன் இலங்கைக்கு வெளியே செல்வதற்கு உடந்தையாக இருத்தல் அல்லது உடந்தையாக இருக்க முயற்சித்தல்; அல்லது அத்தகைய ஆள் ஒருவரை (அந்த ஆளின் சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி) குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காக இலங்கையிலிருந்து அகற்றுதல் அல்லது அகற்றுவதற்கு முயற்சித்தல்;

(4) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் இருக்கும் எவருடனும் சட்ட விரோதமான முறையில் உடலுறவில் ஈடுபடுத்தும் நோக்கத்திற்கென 16 வயதிற்கு குறைந்த எவரையும் இலங்கைக்குக் கூட்டிவருதல் அல்லது கூட்டிவர முயற்சித்தல்;

(5) குறிப்பிட்ட ஆள் ஒருவரை விபச்சார நோக்கங்களுக்கென இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் இருக்கும் விபச்சார விடுதி ஒன்றில் தங்கியிருப்பவராக அல்லது அந்த விடுதிக்கு அடிக்கடி சென்று வருபவராக ஆக்கும் எவ்வயதினையும் உடைய ஒருவரை அவரின் சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி) இலங்கையில் அவருடைய வழமையான வசிப்பிடத்தை விட்டு வெளியேறுவதற்கு (அந்த இடம் ஒரு விபச்சார விடுதியாக இல்லாத நிலையில்) உடந்தையாக இருத்தல் அல்லது உடந்தையாக இருக்க முயற்சித்தல்; இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் இருக்கும் எந்த ஒரு ஆளுடனும் உடலுறவு கொள்ளல்;

(6) ஒருவரின் சம்மதமின்றி அவரைச் சட்டவிரோதமான உடலுறவில் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் அல்லது அவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் நோக்கத்துடன் ஏதேனும் விபச்சார விடுதியில் தடுத்து வைத்தல், கூட்டிக் கொடுத்தல் தவறை செய்பவராக இருப்பதற்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து இரண்டு ஆண்டுகளுக்கு குறையாததும், பத்து ஆண்டுகளை விஞ்சாததுமான காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்; அத்துடன் குற்றப் பணத்தினையும் செலுத்த வேண்டும்.

பிரிவு 360 ஆ : சிறுவர்களைப் பாலியல் ரீதியில் சுரண்டுதல்

(1) எவரேனும் ஒருவர்:

(a) பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்காக அல்லது அத்தகைய ஏதேனும் ஒரு பாலியல் செயற்பாட்டில் ஈடுபடச் செய்வதற்காக அல்லது ஏதாவது ஆபாசமான அல்லது மரியாதைக் கேடான காட்சிப்படுத்தல் அல்லது காட்சிகளில் பங்குபற்றச் செய்யும் நோக்கங்களுக்கென அறிந்துகொண்டே ஒரு பிள்ளையை ஏதேனும் ஒரு வளாகத்தில் தங்கிநிற்க அனுமதியளித்தல்;

(b) உடலுறவு நோக்கங்களுக்கென அல்லது பாலியல் துஷ்பிரயோகத்தின் எவ்வடிவிலான செயற்பாட்டிற்காகப் பிள்ளையைக் கூட்டிக் கொடுப்பவராகச் செயற்படுதல்;

(c) அச்சு அல்லது ஏனைய ஊடகங்கள் மூலம், வாய்மூல விளம்பரங்கள் அல்லது ஏனைய அதுபோன்ற வழிமுறைகள் மூலம் உடலுறவுக்கென ஒரு பிள்ளையின் வாடிக்கையாளராக இருந்து வருமாறு ஆள் ஒருவரை தூண்டுதல் அல்லது எவையேனும் பாலியல் துஷ்பிரயோக வடிவங்களுக்குத் தூண்டுதல்;

(d) ஒரு பிள்ளை மீதான தனது செல்வாக்கை அல்லது தனது உறவுமுறையினைச் சாதகமான விதத்தில் பயன்படுத்தி அப்பிள்ளையை உடலுறவுக்கும் வேறு ஏதேனும் வடிவிலான பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் கூட்டிக் கொடுத்தல்;

(e) பிள்ளையை உடலுறவுக்கு அல்லது ஏதேனும் பாலியல் துஷ்பிரயோக வடிவத்திற்கு கூட்டிக் கொடுக்கும் பொருட்டு அச்சுறுத்துதல் அல்லது வன்முறையை பயன்படுத்துதல்;

(f) ஒரு பிள்ளையை உடலுறவுக்கு அல்லது வேறு ஏதேனும் பாலியல் துஷ்பிரயோக வடிவத்திற்கு கூட்டிக் கொடுக்கும் நோக்கத்துடன் அப்பிள்ளைக்கு அல்லது அப்பிள்ளையின் பெற்றோருக்கு ஏதேனும் பண ரீதியான பிரதிபலன்கள், பண்டங்கள் அல்லது ஏனைய பயன்களை பெற்றுக்கொடுத்தல்

சிறுவர்களைப் பாலியல் சுரண்டல் செய்யும் குற்றத்தினை இழைக்கையில் அவருக்கு ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமான இருவகையிலொரு வகை மறியற்றண்டனை கொண்ட குற்றத்தீர்ப்புக்கு ஆளாகவேண்டும்; அத்துடன் தண்டப் பணம் செலுத்துவதற்கும் ஆளாகவேண்டும்.

2) இப்பிரிவில் பிள்ளை என்பது 18 வயதிற்கு குறைந்த ஒருவரைக் குறிக்கும்.

1998 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவை (திருத்தச் சட்டம்)

பிரிவு 288 – சிறுவர்களைப் பிச்சை எடுக்கச் செய்வித்தல் அல்லது அதற்கு உடந்தையாக இருத்தல்

1) பிச்சை எடுக்கவைக்கும் நோக்கத்திற்காக அல்லது தானப் பொருளைப் பெறவைக்கும் நோக்கத்திற்காக அல்லது தானப் பொருளைக் கொடுக்கத் தூண்டுவதற்காக (பாடுதல், விளையாட்டு காட்டல், எதனையும் நிகழ்த்திக் காட்டல், எதனையும் விற்பதற்காக வழங்குதல் ஆகியவற்றிற்கான பாசாங்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும்) பிள்ளை ஒன்றை ஏதேனும் தெருவில், வளவுகளில் அல்லது இடத்தில் நிற்கச் செய்கின்ற அல்லது அதற்கு உடந்தையாக இருக்கின்ற எவருக்கும் ஐந்தாண்டுகளை விஞ்சாத காலத்திற்கான இரு வகையில் ஒரு வகையான மறியற் தண்டனை குற்றத்தீர்ப்பாக வழங்கப்படும் என்பதுடன் அவருக்கு அபராதத் தொகையும் செலுத்த நேரிடும்.

2) இப்பிரிவில் ''பிள்ளை'' என்பது பதினெட்டு வயதுக்கு குறைந்த ஒருவர் எனப் பொருள்படும்.

288 அ – உடலுறவுக்குக் கூட்டிக்கொடுப்பவர்களாகச் செயற்படச் சிறுவர்களை வாடகைக்கு அல்லது வேலைக்கு அமர்த்துதல்

1) சட்ட விரோதமான உடலுறவுக்கென எவரையும் கூட்டிவிடுவதற்காகத் தெரிந்து கொண்டே பிள்ளை ஒன்றை வாடகைக்கு அமர்த்துகின்ற, வேலைக்கு அமர்த்துகின்ற, இசையச் செய்கின்ற, பயன்படுத்துகின்ற, தூண்டுகின்ற அல்லது பலவந்தப்படுத்துகின்ற ஆள் எவரும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் இரண்டாண்டுகளுக்குக் குறையாததும், ஐந்தாண்டுகளை விஞ்சாததுமான காலத்திற்கான இரு வகையில் ஒரு வகை மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அபராதத் தொகையினையும் செலுத்த நேரிடலாம்.

2) இப்பிரிவில் ''பிள்ளை'' என்பது பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆளொருவர் எனப் பொருள்படும்.

288 ஆ – கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களைக் கடத்துவதற்காகச் சிறுவர்களை வாடகைக்கு அல்லது வேலைக்கு அமர்த்துதல்

1) எவையேனும் கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களைக் கடத்துவதற்காக அறிந்து கொண்டே பிள்ளையொன்றை வாடகைக்கு அமர்த்துகின்ற, இசையச் செய்கின்ற, பயன்படுத்துகின்ற, தூண்டுகின்ற அல்லது பலவந்தப்படுத்துகின்ற ஆளெவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் ஐந்தாண்டுகளுக்குக் குறையாத, ஏழாண்டுகளை மிஞ்சாத காலத்திற்கான இருவகையில் ஒரு வகை மறியட்தண்டனைக் குற்றத்தீர்ப்புக்கு ஆளாகலாம் என்பதுடன் அபராதம் செலுத்தவும் நேரிடலாம்.

2) இப்பிரிவில் ''பிள்ளை'' என்பது 18 வயதுக்கு குறைந்த ஆளொருவர் எனப் பொருள்படும்.

பிரதான சட்டத்தின் பிரிவு 36அ பின்வருமாறு திருத்தப்படுகின்றது:

1) மேற்படி பிரிவின் துணைப் பிரிவில் (5) மாற்றமாக ''அத்தகைய நபரின் வழக்கமான இடத்தை இலங்கையில் விட்டுச் செல்வது'' என்பதில் இருந்து, அந்தப் பந்தியின் இறுதி வரை பின்வருசனவற்றின் அனைத்து சொற்களுக்கும்.

2) ''சட்டவிரோத உடலுறவு அல்லது பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் நோக்கில் எந்தவொரு விபச்சார விடுதியிலும்'', ''எந்தவொரு வளாகத்திலும் சட்டவிரோத உடலுறவு அல்லது பாலியல் துஷ்பிரயோகம்'' என்ற சொற்களுக்கு மாற்றாக அந்தப் பிரிவின் (6) ஆம் துணைப் பிரிவில்.

1999 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சான்றுகள் கட்டளை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

சேர்க்கப்பட்ட ஒரு புதிய பிரிவு 163அ, துஷ்பிரயோகம் தொடர்பான குற்றம் பற்றிய வழக்குகளில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு வீடியோ பதிவை அனுமதிப்பதை அறிமுகப்படுத்தியது. மேலும் இந்தப் பிரிவின் கீழ் சாட்சிகளில் கொடுக்கப்பட்ட எந்த வீடியோப் பதிவுகளும், பிள்ளையின் சாட்சியின் அறிக்கையும், அந்த வீடியோப் பதிவில் வெளிப்படுத்தப்பட்டதும், பிள்ளையின் சாட்சி அவனது / அவளது நேரடி வாக்குமூலத்தைப் வழங்கியதைப் போலவே கருதப்படும்.

இந்தப் பரிவின் கீழ் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றம்′ என்பது ஒரு பிள்ளை தொடர்பாக செய்யும் போது தண்டனைச் சட்டத்தின் பிரிவு 286அ, 308அ, 360ஆ, 360இ, 363, 364அ, 365, 365அ, அல்லது 365ஆ ஆகியவற்றின் கீழ் செய்யப்படும் குற்றமாகவும் கருதப்படும்.

ஒரு பிள்ளை என்பது ஆரம்ப நேர்காணல் வீடியோப் பதிவு மேற்கொள்ளப்படுகின்ற நேரத்தில் 18 வயதுக்கு உட்பட்ட ஒரு நபராவார்.

''வீடியோப் பதிவு'' என்பது எந்த ஊடகத்திலும் எந்தவொரு பதிவையும் குறிக்கின்றது. அதிலிருந்து நகரும் படம் எந்த வகையிலும் தயாரிக்கப்படலாம். மற்றும் அதனுடன் கூடிய ஒலித் தடமும் அடங்கும்.

1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம்

''சிறுவர் துஷ்பிரயோகம் என்பது, ஒரு பிள்ளை தொடர்பான எந்தவொரு செயலையும் அல்லது புறக்கணிப்பையும் குறிக்கின்றது. இது பின்வரும் எந்தவொரு ஏற்பாடுகளுக்கும் முரணானதாகும்:

- தண்டனைச் சட்டத்தின் 286அ, 288, 288அ, 288ஆ, 308அ, 360அ, 360ஆ, 360இ, 363, 364அ, 365, 365அ, அல்லது 365ஆ ஆகிய பிரிவுகள்
- பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் வேலைவாய்ப்புச் சட்டம்
- சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கட்டளைச் சட்டம்
- கல்வி கட்டளைச் சட்டத்தின் கீழ் விதியாக்கப்பட்டுள்ள கட்டாயக் கல்வி தொடர்பான ஒழுங்குவிதி மற்றும் ஆயுத மோதலில் ஈடுபடும் ஒரு பிள்ளையின் ஈடுபாட்டை உள்ளடக்கியது. இது பிள்ளையின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் அல்லது அத்தகைய குழந்தைக்கு உடல் ரீதியாகவோ அல்லது உணர்வு ரீதியாகவோ தீங்கு விளைவிக்கும்

1998 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை (திருத்தச் சட்டம்)

பிரிவு V – குற்றங்களின் விசாரணை

பிரதான சட்டத்தின் பிரிவு 2 திருத்தப்பட்டு, ''சிறுவர் துஷ்பிரயோகம்'' என்பதற்கு பின்வரும் வரையறை சேர்க்கப்பட்டுள்ளது:

ஒரு பிள்ளை தொடர்பான தண்டனைச் சட்டத்தின் 286அ, 288, 288அ, 288ஆ, 308அ, 360அ, 360ஆ, 360இ, 363, 364அ, 365, 365அ, 365இ பிரிவின் கீழ் சிறுவர் துஷ்பிரயோகம் ஒரு குற்றமாக வரையறுக்கப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்.

இச்சட்டத்தின் பிரிவு 3 குற்றச்செயலொன்றினால் பாதிக்கப்பட்ட ஒருவரின் உரிமைகளைக் குறித்துரைக்கின்றது.

குற்றச்செயல்களினால் பாதிக்கப்பட்ட ஒருவர் பின்வருவனவற்றுக்கான உரிமையை கொண்டிருக்க வேண்டும்:

அ. அவ்வாறு பாதிக்கப்பட்டவரின் கௌரவம் மற்றும் அந்தரங்கத்திற்கான மரியாதையுடன் சமத்துவத்துடனும் நியாயமாகவும் நடத்தப்படுவதற்கும்;

ஆ. பாதிக்கப்பட்டது ஒரு பிள்ளையாக இருப்பின் அப்பிள்ளையின் நலன்களை உறுதிப்படுத்தும் முறையில் நடாத்தப்படுவதற்கும்;

இ. குறித்துரைக்கப்பட்டிருக்கக்கூடிய செயல்விதிகளுக்கமைவாக, இழப்பீடு மற்றும் எதிரீடு என்பவை உள்ளடங்கலாக, குற்றச்செயல் ஒன்றினால் பாதிக்கப்பட்ட காரணத்தினால் ஏற்பட்ட ஏதாவது தீங்கு, சேதம் அல்லது இழப்பு என்பவற்றுக்காக உரிய மற்றும் பொருத்தமான மற்றும் நியாயமான பரிகாரத்தினைப் பெறுவதற்கும்;

ஈ. அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், பழிவாங்கல், அடக்குமுறை அல்லது எதிர்த்தாக்குதல்கள் உள்ளிட்ட சாத்தியமான தீங்கிலிருந்து பொருத்தமான முறையில் பாதுகாக்கப்படுவதற்கு;

உ. குற்றச் செயலொன்றினால் பாதிக்கப்பட்ட காரணத்தினால் ஏற்பட்ட ஏதேனும் உள ரீதியான அல்லது உடல் ரீதியான ஊறுகள், தீங்கு, பாதிப்பு அல்லது இயலாமை என்பவற்றுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுவதற்கு;

2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரிவு 31, குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் சாட்சியத்தை அல்லது வாக்குமூலத்தினை அவசரம் காரணமாக அல்லது குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கையின் காரணமாக, நீதியின் அதிசிறந்த நலனுக்காகவும் தேவையெனக் கருதப்பட்டாலும் குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி நீதிமன்றத்தின், ஆணைக்குழுவின் அல்லது சட்ட அமுலாக்கல் அதிகார சபையின் முன் நேரில் வருகை தராமல், நீதிமன்றத்துக்கும் அல்லது ஆணைக்குழுவுக்கும் அல்லது சட்ட அமுலாக்கல் அதிகார சபைக்கும் இலங்கையின் சேய்மையான ஓர் இடத்திற்கும் இடையில் சமகாலத்தில் அல்லது அண்மித்த சமகாலத்தில் செவிப்புல – கட்புல இணைப்பை தாபிக்கக் கூடிய தொழில்நுட்ப வழிமுறைகள் மூலம் "ஒலிப்பதிவு செய்வதற்கான ஏற்பாட்டைக் கொண்டுள்ளது."

இத்தகைய வழிமுறைகளுக்கூடாக பதிவுசெய்யப்பட்ட சாட்சியம் குற்றவியல் தண்டனைக் கோவையின் பிரிவு 110 இன் பிரகாரம் பொருத்தமான வாக்குமூலமாகக் கருதப்படும்.

2017 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம்

இலங்கையினுள் இருந்து மட்டுமன்றி இலங்கைக்கு வெளியேயிருந்தும் சாட்சியளிக்கக்கூடிய விதத்திலும் வாக்குமூலத்தினைப் பதிவுசெய்யக்கூடிய விதத்திலும் ஏற்பாடுகளைக் கொண்டிருக்கும் வகையில் பிரிவு 31 திருத்தப்பட்டது. குற்றச்செயலால் பாதிக்கப்பட்ட எவரினதும் சாட்சியை அல்லது வாக்குமூலத்தினை இலங்கைக்கு வெளியில் இருக்கும் ஏதேனும் சேய்மையான இடத்திலிருந்து பதிவுசெய்ய வேண்டியிருக்குமிடத்து, குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி சாட்சியமளிக்க அல்லது வாக்குமூலம் அளிக்க விரும்பும் நாட்டின் இலங்கை ராஜதந்திரப் பணியகத்தில் அது பதிவுசெய்யப்பட வேண்டும்.

5. நியம செயற்படு முறையின் (SOP) குறிக்கோள்கள் மற்றும் கட்டமைப்பு

குறிக்கோள்கள்:

1. சிறுவர் மனித வியாபாரம் தொடர்பில் ஏற்கனவே இருந்து வரும் நியம செயற்படு முறைக்குச் சமாந்தரமான விதத்தில் செயற்திறன்மிக்க செயல்விதிசார்ந்த பொறிமுறையொன்றை உறுதிப்படுத்துதல்.

2. மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களை உரிய நேரத்திலும் பொருத்தமான முறையிலும் அடையாளம் காண்பதை உறுதிப்படுத்தல்.

3. அடையாளம் காணப்படும் காலத்திலிருந்து மீள் ஒருங்கிணைப்படும் காலம் வரை உதவி மற்றும் ஆற்றுப்படுத்தல் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்

4. சிறுவர் மனித வியாபார சம்பவங்களுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கல் உள்ளடங்கலாக துரிதமான மற்றும் செயற்திறன்மிக்க சட்ட அமுலாக்கல்

5. மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களுக்கு உதவி மற்றும் பாதுகாப்பு என்பவற்றை வழங்குவதில் தனித்துவமான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும் நிறுவனமயப்படுத்தலும்.

5.1 முதல் தகவலைப் பதிவுசெய்தல் / முறைப்பாட்டைப் பதிவுசெய்தல் / அவசரத் தேவைகளை இனங்காணுதல்

முதல் தகவல் அல்லது முறைப்பாடு என்பது இடம்பெற்றிருக்கக்கூடிய மனித வியாபாரம் சம்பவத்தினை அடையாளம் காண்பதற்கான முதலாவது படிமுறையாகும். அடையாளம் காண்பதற்கும் மேலதிக விசாரணைகளுக்குமான முக்கிய தகவல்கள் பதிவுசெய்யப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்த இது ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

இடம் பெற்றிருக்கக்கூடிய அல்லது ஏற்கனவே இடம் பெற்றுள்ள மனித வியாபாரக் குற்றம் ஒன்று தொடர்பில் கிடைக்கக்கூடிய எந்தத் தகவலும் ஆரம்பத் தகவலாகக் கொள்ளப்படும். இடம் பெற்றுள்ளதாகக் கருதப்படக்கூடிய ஒரு குற்றத்தின் சாட்சியாளராக இருக்கின்ற எந்தவொரு நபரும் மற்றும் / அல்லது குற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ள எந்த ஒருவரும் முதல் தகவலை வழங்கலாம்.

ஒரு முறைப்பாட்டின் போது இடம் பெறுகின்ற அல்லது ஏற்கனவே இடம் பெற்றுள்ள ஒரு குற்றம் தொடர்பில் பாதிக்கப்பட்டுள்ளவர் சார்பில் முறையான முறைப்பாட்டை வழங்குபவர் தாமாகவோ (பிள்ளையாகவோ) அல்லது பிள்ளையின் பெற்றோராகவோ அல்லது பாதுகாவலராகவோ இருப்பார்கள்.

இடம்பெற்றிருக்கக்கூடிய சிறுவர் மனித வியாபாரம் பற்றிய தகவல்களை அல்லது முறைப்பாடுகளைப் பின்வருன போன்ற பல்வேறு வழிமுறைகள் ஊடாகப் பெறமுடியும்:

1) மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள்
2) குடும்ப உறுப்பினர்கள் / பாதுகாவலர்கள் / உறவினர்கள்
3) பொலிஸார் நடத்திய திடீர்ச் சோதனை மூலம் / பொலிசுக்கு கிடைத்த தகவல்கள் மூலம் மீட்கப்பட்டிருக்கலாம்.
4) உதவித் தொலைபேசித் சேவைகள் (Helplines) - தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, பொலிஸ், அரசு சார்பற்ற நிறுவனங்கள் (NGOs)
5) எழுத்து மூலமான முறைப்பாடுகள் (பெயர் குறிப்பிடாத முறைப்பாடுகளையும் உள்ளடக்கிய விதத்தில்) - கடிதங்கள், மின்னஞ்சல்கள் முதலியவை
6) சிவில் சமூக அமைப்புக்கள் / சனசமூக அமைப்புக்கள் ஊடாகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.
7) சர்வதேச/உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாகப் பெற்றுக்கொள்ளல்
8) சிறுவர் செயற்பாட்டாளர்களிடமிருந்து
9) ஊடகவியலாளர்கள் / ஊடகங்கள் / சமூக வலைத்தள அறிக்கைகள்

10) சுற்றுலாத்துறையில் / ஹோட்டல் கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் தனிநபர்கள் மூலம்
11) தூதுவராலயங்கள்/ தூதாண்மைகள் (Consulates) முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.
12) பிள்ளைகளுக்காக கடமையில் ஈடுபட்டுள்ள அடிமட்ட அரசாங்க உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்ற சமூக கண்காணிப்பு மூலம்
13) பொது மக்கள் மற்றும் / அல்லது வேறு வழிமுறைகள்

இடம்பெற்றிருக்கக் கூடிய சிறுவர் மனித வியாபாரம் பற்றிய தகவலை அல்லது முறைப்பாட்டை பின்வருவன உள்ளிட்ட பல அதிகார அமைப்புக்கள் பெற்றுக்கொள்ள முடியும்:

1) இலங்கை பொலிஸ் (119 மூலம் பொலிஸ் தலைமை அலுவலகம் அல்லது உள்ளூர் பொலிஸ் நிலையங்கள், சுற்றுலாப் பொலிஸ், பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவுகள்)
2) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (1929 மூலம் தலைமை அலுவலகம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பொலிஸ் அல்லது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட மற்றும் பிரதேச உத்தியோகத்தர்கள்).
3) நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் தேசிய திணைக்களம் (சிறுவர் உரிமைகள் மேம்படுத்தல் அதிகாரி ஊடாக), நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் மாகாண திணைக்களம் (நன்னடத்தை அதிகாரி ஊடாக)
4) மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் பெண்கள் பற்றிய தேசியக் கமிட்டி -1938 மூலம்
5) தொழில் திணைக்களத்தின் தொழில் உத்தியோகத்தர்கள் (தேசிய மற்றும் உள்ளூர் மட்டத்தில்)
6) குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்
7) சிவில் சமூக அமைப்புக்கள், உள்நாட்டு மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள்
8) இலங்கை தூதுவராலயங்கள் / தூதாண்மைகள்
9) பிரதேச செயலகங்களைச் சேர்ந்த சிறுவர் நலன்புரி மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
10) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

சிறுவர்களை பொறுத்தவரையில் பெறப்படும் முறைப்பாடு பொதுவாக மனித வியாபாரம் தொடர்பானதாக இருக்காது என்பதை அதிகாரிகள் புரிந்துகொள்வது முக்கியமானதாகும். கிடைக்கும் முறைப்பாடுகள் வழமையாக பாலியல் சுரண்டல், பாலியல் துஷ்பிரயோகம், உடல் ரீதியான துஷ்பிரயோகம் அல்லது சிறார் ஊழியம் என்பவை பற்றியதாகவே இருக்கின்றன. நினைவில் வைத்திருக்கவேண்டிய மற்றொரு அம்சம் மனித வியாபாரமினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்கள் விபச்சார விடுதிகள் கட்டளைச் சட்டம்

அல்லது அலைந்து திரிபவர்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழும் கைது செய்யப்பட முடியும் என்பதாகும். மனித வியாபாரம் இடம்பெற்றுள்ளது என முறைப்பாடு செய்வதற்கு நடைபெற்றது மனித வியாபாரம்தான் என்பதைப் பிள்ளை அல்லது முறைப்பாட்டாளர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில புரிந்துகொள்ளாமல் இருக்கலாம். எனவே இவ்வகையான முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் அல்லது பதிவுசெய்யும் உத்தியோகத்தர்கள் மனித வியாபாரம் சம்பவங்கள் பற்றிய பூர்வாங்க அடையாளப்படுத்தலை மேற்கொள்வதற்குப் போதியளவில் பயிற்றுவிக்கப்பட்டு அவசியமான தடுத்துப் பரிசீலிக்கும் திறன்களும் கருவிகளும் வழங்கப்படவேண்டும்.

மேலும், பெண்கள் மற்றும் சிறுவர்கள் சம்பந்தப்பட்ட முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டு விசாரணை நடத்துவதற்காக ஒவ்வொரு பொலீஸ் நிலையத்திலும் 'சிறுவர் மற்றும் பெண்கள் பணியகப் பிரிவு' ஒன்று இருப்பதை இலங்கைப் பொலிஸ் உறுதிப்படுத்தவேண்டுமெனப் பரிந்துரை செய்யப்படுகின்றது.

**குறிப்பு: மனித வியாபாரம் சம்பவம் பற்றிய அல்லது தண்டனைச் சட்டக்கோவையில் குற்றமாகக் கருதப்படும் வேறு ஏதேனும் சம்பவம் பற்றிய முறைப்பாடொன்றைத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 1929 ஊடாகப் பெற்றுக்கொள்ளும் அதிகார சபை அந்த முறைப்பாட்டினை அப்பிள்ளை வசிக்கும் பிரதேசத்தைச் சேர்ந்த உள்ளூர் பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பி வைக்கின்றது.

5.1.1 தகவல்களை / கிடைத்துள்ள முறைப்பாடு மற்றும் ஆரம்ப விசாரணைகலை உறுதிசெய்து கொள்ளல்

தகவல் / முறைப்பாடு கிடைக்கப் பெற்று, பூர்வாங்கப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, சிறுவர் மனித வியாபாரம் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர், மேலதிக விசாரணைக்காக அந்த விடயம் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். பொலிஸ் நிலையம் பொலிஸ் நடவடிக்கை முறைகளின் பிரகாரம் செயற்பட்டு, பூர்வாங்க தகவல் பரீட்சிப்புப் பெறுபேறுகளைச் சரிபாரக்கும். முதல் தகவலை வழங்கும் நிறுவனங்கள் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து அவதானத்துடன் இருக்கவேண்டும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பாதிக்கப்பட்ட பிள்ளை தொடர்பான முறைப்பாட்டை உள்நாட்டுப் பொலிஸ் நிலையத்துக்கு சமர்ப்பித்து 48 மணித்தியாலங்களுக்குள் ஓர் அறிக்கையைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை *(NCPA)* க்கு பாதிக்கப்பட்ட பிள்ளை தொடர்பான ஏதும் முறைப்பாடுகள் கிடைத்தால் அல்லது கண்காணிப்பு ஊடாக கண்டு பிடித்தால், இடம்பெறவுள்ள சிறுவர் மனித வியாபாரம் அடங்கலாக கிடைத்துள்ள தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். விடயமானது உணர்வுப்பூர்வமானதாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் மற்றும் உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதில் சிக்கல் ஏதும் இருப்பின் மேற்படி விடயம் விசாரணைக்காகவும் உரிய

நடவடிக்கைகளுக்காகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை *(NCPA)* யின் பொலிஸ் பிரிவுக்கு அனுப்பப்படும். தேடுதல் பிடியாணை அவசியமாக இருப்பினும் அது விசாரணைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் என்றிருந்தால், சம்பந்தப்பட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை *(NCPA)* யின் பொலிஸ் பிரிவு அதனையும் கருத்தில் கொள்ளும்.

அவ்வாறே, பொலிசின் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்துக்கு பாதிக்கப்பட்ட பிள்ளை தொடர்பான ஏதும் முறைப்பாடுகள் கிடைத்தால் அல்லது கண்காணிப்பு ஊடாக கண்டு பிடித்தால், இடம்பெறவுள்ள சிறுவர் மனித வியாபாரம் அடங்கலாக கிடைத்துள்ள தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். விடயமானது உணர்வுப்பூர்வமானதாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் மற்றும் உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்படு செய்வதில் சிக்கல் ஏதும் இருப்பின் மேற்படி விடயம் விசாரணைக்காகவும் உரிய நடவடிக்கைகளுக்காகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை *(NCPA)* யின் பொலிஸ் பிரிவுக்கு அனுப்பப்படும். தேடுல் வாரன்ட் அவசியமாக இருப்பினும் அது விசாரணைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் என்றிருந்தால், சம்பந்தப்பட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை *(NCPA)* யின் பொலிஸ் பிரிவு அதனையும் கருத்தில் கொள்ளும்.

குறிப்பு: 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 33, எந்த ஒரு வளவிலும் எவ்வடிவிலுமான சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெற்று வருகின்றது என்பதனை நம்புவதற்குக் காரணங்கள் இருக்கையில் அந்த வளவில் பிரவேசித்து, பரிசோதனை நடத்துவதற்கு குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு அதிகாரமளிப்பதற்கான தத்துவத்தை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு வழங்குகின்றது. மேலும், தேடுதல் கட்டளை ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கென நீதிமன்றத்தில் விண்ணப்பிப்பது அத்தகைய சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விசாரணைகளில் பாதிப்பினை ஏற்படுத்த முடியும். இந்த பரிசோதனையும் கூட பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு பிள்ளை தொடர்பான மீட்பு நடவடிக்கைக்கு வழிகோல முடியும்.

5.2 மீட்பு

பாதிக்கப்பட்ட பிள்ளை தொடர்ந்தும் சுரண்டலுக்குட்பட்ட நிலைமைகளின் கீழ் இருந்தால், மீட்பினைச் செய்வதற்கான ஆணையைக் கொண்டிருக்கும் ஒரு நிறுவனத்தினால் மீட்பு நடவடிக்கையினை முன்னெடுக்கமுடியும். இல்லாவிடின் பொலிசாரினால் சகல மீட்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். பொலிஸார் தன்முனைப்பான திட்டம் ஒன்றை உருவாக்கி, மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, தங்குமிடம், மருத்துவ உதவி, சட்டச் சேவைகள் போன்ற சேவைகளை வழங்கும் முதன்மையான அதிகார அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் ஒருங்கிணைந்து செயற்படவேண்டுமென
எதிர்பார்க்கப்படுகின்றது.

மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பின்வரும் படிமுறைகள் எடுக்கப்பட வேண்டும்:

(1) ஓர் உப பொலிஸ் பரிசோதகர் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தையுடைய ஒரு அதிகாரி அணியை வழிநடாத்த வேண்டும் என்பதுடன் அவர்களில் குறைந்தது ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தரும் இருத்தல் வேண்டும்.
(2) அமைவிடத்தை அடையாளம் கண்டு கொள்ளல்
(3) தேவையேற்படுமிடத்து ஒரு **decoy** ஐ அமர்த்துதல்
(4) அமைவிடத்திற்கு வருகை தருவோருக்கான பதிவைப் பரிசோதித்தல்
(5) உரிய சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்டவரை அடையாளம் காணுதல்
(6) பிள்ளை பொலிஸ் பாதுகாப்புக்கு எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் குற்றவாளி கைது செய்யப்பட வேண்டும்.

மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பின்வரும் படிமுறைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.:

(அ) எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பாதிக்கப்பட்ட சிறுவர்களை வயது வந்தவர்களிலிருந்து/சந்தேக நபர்களிலிருந்து பிரித்து, புறம்பாக அழைத்துச் செல்லல்/ஏற்றிச் செல்லல்.
(ஆ) சிறுவர்களின் அடையாளம் மற்றும் குடும்பத்தினரின் அடையாளம் என்பன அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பொது மக்களிடமிருந்தும் /ஊடகங்களிலிருந்தும் மறைக்கப்படுவதை உறுதிப்படுத்தும் விதத்தில் அச்செயற்பாட்டை முன்னெடுத்தல்.
(இ) குறிப்பாக, பிள்ளை துணையின்றி இருந்தால், குற்றச் செயலில் பெற்றோரின்/பாதுகாவலர்களின் உடந்தை இருக்கின்றது என நம்புவதற்கான காரணங்கள் இல்லாதிருக்குமிடத்து, குடும்பத்தைக் கண்டுபிடிப்பதற்கும், பிள்ளையைப் பெற்றோருடன்/பாதுகாவலருடன் இணைப்பதற்கும் அனைத்து வழிமுறைகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
(ஈ) பிள்ளை துணையுடன் இருந்து வந்தால், மனித வியாபாரம் செய்வதில் அல்லது சுரண்டலில் பெற்றோரின்/பாதுகாவலரின் தொடர்பு இருக்கின்றது எனச் சந்தேகிப்பதற்கு காரணங்கள் இருந்தாலேயன்றி, பிள்ளையைப் பெற்றோரிடமிருந்து அல்லது பாதுகாவலரிடமிருந்து பிரிக்கக்கூடாது. மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களில் சந்தேகங்கள் இருப்பின் மனித வியாபாரம் செய்ததாகச் சந்தேகிக்கப்படும் ஆளிடமிருந்து பிள்ளையைப் பிரித்துவைக்க வேண்டும்.

5.3 பூர்வாங்க பரிசோதனை மற்றும் பரீட்சிப்புப் பட்டியல்

நேர்காணலுக்கு முன்னரான மதிப்பீடு முடியுமான வரைக்கும் எளிமையானதாகவும், அனைத்தையும் உள்ளடக்கியதாகவும், மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களைப் பொறுத்தவரையில்

முடியுமான வரையில் சுருக்கமானதாகவும் இருக்கவேண்டும். சிறுவர்கள் மீண்டும் பாதிப்பிற்கு உள்ளாகும் நிலைக்கு வழிகோலக்கூடிய அதிகளவான நேர்காணல்களை/சம்பவம் தொடர்பான விபரங்களை வழங்குவதைத் தடுப்பதற்கு இது அவசியமாகும். பரிசோதனை மிகச் சிறப்பான விதத்தில் நிலையான பரிசோதனைப் முறை ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மனித வியாபார சம்பவம் ஒன்றின் பூர்வாங்க அடையாளப்படுத்தல் தொடர்பாகப் உதவும் குறிகாட்டிகளை மேற்படி முறை கொண்டிருக்கும். மேலும், பூர்வாங்க அடையாளம் காணும் செயற்பாடு பாதிக்கப்பட்டிருக்கும் பிள்ளையின் நிலைமை தொடர்பான பூர்வாங்கக் குறிகாட்டி ஒன்றை வழங்குகின்றது. அது விசாரணையைத் தூண்டுவதுடன், உதவி மற்றும் பாதுகாப்பு என்பவற்றை அணுகுவதற்கான முயற்சிகளை எடுக்கும்.

5.4 நேர்காணலுக்கு முன்னரான மதிப்பீட்டை இரு கட்டங்களில் மேற்கொள்ள முடியும்:



முதலாம் கட்டம் : குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட விசாரணை

மனித வியாபாரம் ஒன்று இடம்பெற்றிருக்கக்கூடிய எந்த ஒரு நிலைமையிலும் "முதல் பார்வையில்" அது தொடர்பான குறிகாட்டிகள் தென்படுகின்றனவா என்ற விடயத்தை எப்பொழுதும் கருத்தில் கொள்ள வேண்டும். இந்தக் குறிகாட்டிகள் தனிநபர் ஒருவர் இச்செயலால் பாதிக்கப்பட்டுள்ளாரா என்ற விடயத்தை தீர்மானிக்கக்கூடியதாக இருப்பதுடன் மேலதிக விசாரணைகளையும் அவசியப்படுத்துகின்றன[4]. அவை வருமாறு:

- துஷ்பிரயோகம் குறித்த அடையாளங்கள்: மனித வியாபாரம் செய்பவர்கள் பாதிக்கப்பட்டிருப்பவர்களைத் தொடர்ச்சியாக உடல் ரீதியான மற்றும் உளவியல் ரீதியான துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்குகின்றார்கள். இது தொடர்பான அடையாளங்கள் வெளியில் தென்படக்கூடியவையாகவும் தென்படாதவையாகவும் (உளவியல் ரீதியான தாக்கங்களாகவும்) இருக்க முடியும். மேலும், ஒரு சில

[4] நேரடி உதவி தொடர்பான IOM வழிகாட்டி
https://publications.iom.int/system/files/pdf/iom_handbook_assistance.pdf

சந்தர்ப்பங்களில் அவை குறிப்பிட்ட நபர் தனக்குத் தானே இழைத்துக் கொண்ட தீங்காகவும் இருக்கமுடியும்.

- பிள்ளை அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பிள்ளை இல்லை என்பதற்கான அடையாளங்கள்: கண்டுபிடிக்கப்படும் பிள்ளைகள் பொதுவாக அதே பிரதேசத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட பிள்ளைகளாக இருப்பதில்லை.
- பின்புலம்: பாதிக்கப்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் பின்புலத்தைக் கவனமாகப் பரிசீலனை செய்வது முக்கியமாகும். பாதிக்கப்பட்ட அனைவரும் கடத்தப்பட்டுள்ளார்கள் எனக் கருதுவது ஒரு போலி நம்பிக்கையாகும். ஒரு சிலர் பலவந்தமாகக் கூட்டிச் செல்லப்படுகின்ற போதிலும், பாதிக்கப்படுபவர்களில் பெரும்பாலானவர்கள் உண்மையிலேயே அவர்களை அழைத்துச் செல்லும் நபரின் ஆசை வார்த்தைகளால் தூண்டப்பட்டு, சுய விருப்பத்துடன் செல்பவர்களாகவே இருக்கின்றனர். ஆனால், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்கள் பொய்யான வாக்குறுதிகளை நம்பிச் செல்கின்றார்கள் (உதாரணம் வயது முதிர்ந்த "காதலர்கள்").
- ஆவணங்கள்: அடையாள ஆவணங்களை கொண்டிராமை; அல்லது போலி ஆவணங்களை வைத்திருத்தல்.

குறிப்பு : ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குறிகாட்டிகள் இருத்தல் தனிநபர் ஒருவர் மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதனை உறுதிப்படுத்தாது. மேலதிக பரிசோதனை தேவைப்படுகின்றது என்பதை மட்டுமே அது எடுத்துக் காட்டுகின்றது.



இரண்டாம் கட்டம் : விசாரணைக் கேள்விகள்

குறிகாட்டிளுக்கு மேலதிகமாக, மேற்படி விசாரணை செயன்முறைக்கு அமைய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் ஒரு ஆரம்ப மதிப்பீடு மேற்கொள்ளப்படும். பூர்வாங்க விசாரணை பற்றிய அமுலிலுள்ள பொலிஸ் வழிகாட்டிகள் சகிதம் விசாரணை முறையானது மனித வியாபாரத்தினால் பாதிக்கப்படக் கூடியவர்களை அடையாளம் காண உதவும். (பின்னிணைப்பு 2). இது மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பிள்ளையை அடையாளம் காணுவதில் வழிகாட்டியாகப் பயன்படுத்தப்படும்.

பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் / முறைப்பாடு கிடைத்த பின்னர் தற்போது அமுலிலுள்ள நடவடிக்கை முறையின் பிரகாரம் பாதிக்கப்பட்ட பிள்ளை அதன் பெற்றோருடன் அல்லது பாதுகாவலருடன் இணைந்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைச் சந்திக்குமாறு கேட்கப்படுவார். பொறுப்பதிகாரி குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டும் விசாரணைக்குரிய கேள்விகளை கேட்பதன் மூலமும் பூர்வாங்கப் பரிசோதனையை மேற்கொள்கின்றார். பிள்ளை மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்ற ஆரம்பத் தீர்மானத்தினைப் பொறுப்பதிகாரி மேற்கொண்ட பின்னர் பொலிஸ் நிலையத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் கருமபீடத்தின் உத்தியோகத்தரிடம் பிள்ளை மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சம்பவத்தினைப் பதிவுசெய்யுமாறு பணிப்புரை வழங்குவார்.

5.5 தேவைகளை அடையாளம் காணல்

முதல் தகவலைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரிகளும் / சட்ட அமலாக்கல் உத்தியோகத்தர்களும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர உதவி வழங்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்த ஆரம்பப் பரிசோதனையின் போது பாதிக்கப்பட்டவர்களின் அவசரத் தேவைகளை எப்பொழுதும் மதிப்பீடு செய்ய வேண்டும். அவசரத் தேவைகள் குறித்த இந்த மதிப்பீட்டினை நேர்காணலின்போது பொலிஸ் நிலையத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் கருமபீடத்தின் உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளமுடியும். இத்தேவைகள் ஏனையவற்றுக்கு மத்தியில் ஆபத்தற்ற நிலை, பாதுகாப்பு, மருத்துவத் தேவைகள் அல்லது உளவியல் தேவைகள் என்பவற்றையும் உள்ளடக்குகின்றன. பாதிக்கப்பட்ட பிள்ளை ஒரு வெளிநாட்டவராக இருந்தால் உரைபெயர்ப்புச் சேவைகள் தேவைப்படலாம்.

விசேட தேவைகளையுடைய (மொழிபெயர்ப்பாளர்கள் / உரைபெயர்ப்பாளர்கள் / சமிக்ஞை மொழிபெயர்ப்பாளர்கள்) பிள்ளைகளுக்காக விசேட உதவிகள் / சேவைகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். அடையாளம் காணப்பட்டுள்ள பாதிக்கப்பட்டுள்ள பிள்ளை கேட்டல் குறைபாடுள்ள அல்லது பேச்சுத் திறண் அற்றதாக இருக்கலாம் என்பதுடன் சமிக்ஞை ஊடாக தொடர்பாடலை வேண்டி நிற்கலாம். பிள்ளைக்கு சமிக்ஞை மொழி ஊடாக தொடர்பாடலை மேற்கொள்ளும் திறண் உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்வது விசாரணை உத்தியோகத்தரின் அல்லது முதல் பொறுப்புக்கூறுபவரின் பொறுப்பாகும். அவ்வாறுதான் என்றால், சமிக்ஞை மொழி ஒத்துழைப்பை வழங்குவதற்குப் பொருத்தமான ஒருவர் அடையாளம் காணப்படுதல் வேண்டும்.

> குறிப்பு: அரசாங்க நிறுவனங்களுடனும் சர்வதேச மற்றும் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் கூட்டிணைந்து பாதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்களுக்கு உதவி வழங்குவதற்கான ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு மனித வியாபாரத்துக்கு எதிரான தேசிய செயலணியின் தலைவர் என்ற வகையில் நீதியமைச்சின் செயலாளரைத் தொடர்பு கொள்ளலாம்.

பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களின் தேவைகளை அடையாளங்காணும் செயற்பாட்டை நன்னடத்தை உத்தியோகத்தருடன் இணைந்து ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் மிகச் சிறந்த முறையில் மேற்கொள்ள முடியும். தேவைகள் தொடர்பான மதிப்பீடு பிள்ளையின் பராமரிப்புத் திட்டத்திற்கான அடிப்படையாக இருப்பதே இதற்கான காரணமாகும். அத்திட்டம் நன்னடத்தைச் சேவைகளினால் முதன்மையாக நிர்வகிக்கப்படும். இந்தப் பூர்வாங்க பரசீலனை பாதிக்கப்பட்டவர் எதிர்கொள்ளக்கூடிய ஏதேனும் உடனடி ஆபத்துக்கள் அல்லது பாதுகாப்புத் தொடர்பான கரிசனைகள் என்வற்றை மதிப்பிடுவதற்கும் அதன் பிரகாரம் அவற்றைக் கவனத்தில் கொள்வதற்கும் உதவ முடியும்.

5.6 பூர்வாங்கத் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளல்

சிறுவர்கள் மற்றும் இளம் நபர்கள் கட்டளைச் சட்டத்தின் (CYPO) பிரிவு 17(1), சட்டத்தை அமுல்படுத்தும் உத்தியோகத்தர் ஒருவர் ஒரு பிள்ளையை அல்லது இளம் நபர் ஒருவரை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதாக இருந்தால் அதனை அவர் சம்பந்தப்பட்ட நன்னடத்தை உத்தியோகத்தருக்கு அறிவிக்கவேண்டும் எனக் கோரப்படுகின்றது. நன்னடத்தை உத்தியோகத்தர் கட்டளைச் சட்டத்தின் அட்டவணைக்கு இணங்க பின்வரும் தகவல்களை எழுத்தில் அல்லது தொலைபேசி மூலம் வாய்மொழியாக சமர்ப்பித்தல் வேண்டும்:

(1) பிள்ளையின் பெயர்
(2) வயது
(3) பிள்ளையின் பால்
(4) குற்றம்
(5) சம்பந்தப்பட்ட நீதிமன்றமும் ஆஜர்படுத்தும் திகதியும்

சிறுவர் மற்றும் இளம் நபர்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 17(2) இன் பிரகாரம் சட்டத்தை அமுல்படுத்தும் உத்தியோகத்தரிடமிருந்து அறிவித்தலைப் பெற்றுக்கொண்டதன் பேரில் நன்னடத்தை உத்தியோகத்தர் அப்பிள்ளையின் பின்னணி குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்பதுடன் நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கென அறிக்கை ஒன்றையும் தயாரிக்க வேண்டும். பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு என்பன தேவைப்படும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் மூலம் விசேட உதவியினைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்த இச்செயன்முறையினை ஒருங்கிணைப்பது முக்கியமானதாகும்.

மனித வியாபாரத்திற்கு பாதிக்கப்பட்ட சிறுவர்கள் குறித்த ஒரு முறைப்பாடு கிடைக்கையில் பொலிஸ் தொலைபேசி செய்திகளுக்கான கட்டளைகள் (RTM) 860 இன் அடிப்டையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அந்த முறைப்பாடு கிடைத்து 24 மணித்தியாலங்களினுள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேற்பார்வை உத்தியோகத்தர் ஒருவரிடமும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினது தவிசாளருக்கும் முதல் தகவல் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

5.7 பாதிக்கப்பட்ட பிள்ளையை நேர்காணுதல்

பூர்வாங்க விசாரணையும் தேவைகளை அடையாளம் காணும் செயற்பாடும் பூரணமடைந்த பின்னர் பாதிக்கப்பட்ட பிள்ளையை விரிவாக நேர்காணும் செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் மூலம் பாதிக்கப்பட்டவர் பலமுறை நேர்காணலுக்கு உட்படுத்தப்படாது என்பது உறுதி செய்யப்படுகின்றது. இந்த விடயம் பற்றி முழு விபரங்களையும் பிள்ளைக்கு மேற்கொண்டும் அவசியமான தேவைகளையும் இது தீர்மானிக்கும்.

பிள்ளை சிறுவர் நேய அடிப்படையில் நேர்காணல் செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு, பிள்ளையின் உரிமையைக் கருத்தில் கொண்டு மற்றும் மீண்டும் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்காக விரிவான நேர்காணல் மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்கள் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் Save the Children Sri Lanka ஆகியவை IOM நிருவனத்துடன் இணைந்து உருவாக்கியிருக்கும் நேர்காணல் வழிகாட்டல்களுக்கு இணங்க விரிவான நேர்காணல் மேற்கொள்ளப்பட வேண்டும். (இது www.childprotection.gov.lk இல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது) இந்த விரிவான வழிகாட்டியானது மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பிள்ளையை நேர்காணும் போது பின்பற்றப்பட வேண்டிய படிமுறைகளைத் தெளிவாக வரையறுக்கின்றது.

5.8 இடைக்கால மற்றும் நீண்டகால தேவைகளுக்கு பதிலளித்தல்

பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளைக் கண்டறிவதற்கான நேர்காணல் மற்றும் ஆரம்ப பதில்களுக்கு மேலதிகமாக, விசாரணையின் போது (வழக்குக்கு முன்), வழக்கின் போது மற்றும் வழக்கின் பின்னர் ஆகிய கட்டங்களில் பாதிக்கப்பட்டவருக்கு உறைவிடத்தையும் பாதுகாப்பையும் வழங்குவது உள்ளிட்ட பாதிக்கப்பட்டவர்களது இடைக்கால மற்றும் நீண்ட கால தேவைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இந்தப் பகுதி பெருமளவுக்கு உளவியல் முதலுதவி வழங்கப்படுவது பற்றியே (Psychological First Aid) (PFA)[5] விபரிக்கின்றது. மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களையும் வயது வந்தோரையும் பொறுத்தவரையில் இந்த உளவியல் முதலுதவி வினைத்திறன்மிகு உடனடி உள சமூக தலையீடாக இருக்கின்றது. அனர்த்தம் மற்றும் வன்முறை என்பவற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களுடன் பணியாற்றுவோருக்கும் வயது வந்தவர்களுடன் பணியாற்றுவோருக்கும் உளவியல் முதலுதவி தொடர்பாகப் (PFA) பயிற்சி வழங்குகின்ற தொழில்ரீதியானவர்களும் நிறுவனங்களும் காணப்படுகின்றன. எனவே முதல் பதிற்செயற்பாட்டின்போது சிறுவர்களுக்கு உளவியல் முதலுதவி வழங்கப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கப்படுகின்றது.

5.9 மருத்துவப் பராமரிப்பு

சிறுவர்களின் மருத்துவப் பரிசோதனைகள் அவர்களின் அந்தரங்கத்தன்மை மற்றும் கண்ணியம் ஆகியவற்றினைப் பாதுகாக்கும் விதத்தில் நடத்தப்படுவது முக்கியமானதாகும். துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களின் மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் விசாரணைகள் ஏனய நோயாளிகளின் முன்னிலையிலும் வைத்தியசாலைக்கு வந்திருப்போரின் முன்னிலையிலும் நடத்தப்பக் கூடாது. இது அதிக சங்கடத்தையும் மன அதிர்ச்சியினையும் ஏற்படுத்தக்கூடியதாகவும் பிள்ளையை மீண்டும் பாதிக்கக்கூடியதாகவும் அமைய முடியும்.

ஒரு பிள்ளை மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதாக அரசாங்க அதிகாரிகள் தேவையான மருத்துவ சிகிச்சைக்காக அவர்களை நேரடியாக அருகிலுள்ள அரசாங்க வைத்தியசாலைக்கு அல்லது சட்ட வைத்திய

[5] களப் பணியாளர்களுக்காக உலக சுகாதார் தாபனத்தினால் (WHO) உருவாக்கப்பட்ட ஆரம்ப உளவியல் முதலுதவி இது தொடர்பான வழிகாட்டல்களை இந்த இணையதளத்தில் மூன்று உள்நாட்டு மொழிகளிலும் வழங்குகின்றது https://www.who.int/mental_health/publications/guide_field_workers/en/இதன் நடைமுறை Save the Children அமைப்பினால் சிறுவர்களுடன் பணியாற்றுகையில் பயன்படுத்துவதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் தொடர்பான உளவியல் முதலுதவி குறித்த மேலதிக தகவல்களை பார்க்கவும்: https://resourcecentre.savethechildren.net/library/save-children-psychological-first-aid-training-manual-child-practitioners (GIZ மற்றும் Save the Children என்பன இந்தக் கையேடு சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதுடன் அதனை பெண்கள் மற்றும் சிறுவர்கள் அமைச்சிலிருந்தும் புஜணு இலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

அதிகாரியிடம் அனுப்புதல் வேண்டும். பாதிக்கப்பட்டது ஒரு வெளிநாட்டவராக இருப்பின், மருத்துவ சிகிச்சைக்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டால் நீதவானின் அனுமதியின் பேரில் அவர்களை தனியார் மருத்துவமனைக்கு அனுப்பப்படலாம்.

குறிப்பு: அரசாங்க நிறுவனங்களுடனும் சர்வதேச மற்றும் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் கூட்டிணைந்து பாதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்களுக்கு உதவி வழங்குவதற்கான ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு மனித வியாபாரத்துக்கு எதிரான தேசிய செயலணியின் தலைவர் என்ற வகையில் நீதியமைச்சின் செயலாளரைத் தொடர்பு கொள்ளலாம்.

சட்ட மருத்துவ அதிகாரி (JMO) குற்றச்செயலால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களையே பிரதானமாகப் பரிசோதனை செய்கின்றார். சட்ட மருத்துவ அதிகாரியின் பரிசோதனை அறை, பரிசோதனையின்போது ஏற்படக்கூடிய மன அதிர்ச்சி நிலையைத் தணிக்கும் வகையில் பிள்ளைக்கு உகந்த இடமாக ஆக்கப்படவேண்டும். மேலும் பிள்ளை முதலில் வைத்தியசாலையில் சேர்க்கப்படுகையில் நோயாளிக்கான மருத்துவச் சிகிச்சை பற்றிய கலந்துரையாடல் (Clinical Case Conference) மற்றும் நிறுவன ரீதியான கலந்துரையாடல் (Institutional Case Conference) ஆகியவற்றினை நடத்துவது தொடர்பாக சுகாதார அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் இருக்கின்றன. மருத்துவச் சிகிச்சை தொடர்பான கலந்துரையாடல் சம்பந்தப்பட்ட சட்ட மருத்துவ அதிகாரியினால் ஆரம்பித்துவைக்கப்படுவதுடன் அது பிள்ளையின் உடனடியான மருத்துவத் தேவைகளை நிறைவேற்றும் விடயத்தில் கவனம் செலுத்துகின்றது[6]. நிறுவன ரீதியான நோயாளர் குறித்த கலந்துரையாடலானது சட்ட அமுலாக்கல் அதிகாரிகள், வைத்திய நிபுணர்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் ஆகிய முதன்மையான பங்கீடுபாட்டாளர்களை உள்ளடக்குவதுடன் நன்னடத்தை உத்தியோகத்தர் அதன் முகாமையாளராக நியமிக்கப்படுவார். நன்னடத்தை உத்தியோகத்தரின் ஆலோசனையுடன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உத்தியோகத்தர் சம்பவ மாநாட்டுக்கு பிள்ளையின் பாதுகாப்புப் பற்றிய அறிக்கையின் மதிப்பீட்டை சமர்ப்பிப்பார். பிள்ளையின் உளவியல், மருத்துவ, சமூக மற்றும் கல்வித் தேவைகளை அடையாளங்காணும் பொருட்டு பிள்ளை தொடர்பான முழுமையான ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற விடயத்தை உறுதிப்படுத்துவதே இக்கலந்துரையாடல் மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேறாகும். நிறுவன ரீதியான கலந்துரையாடல் (Institutional Case Conference) பங்கீடுபாட்டாளர்களால் பெறப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றுவது இக்கலந்துரையாடலில் சம்பந்தப்பட்டுள்ள சிறுவர் நல வைத்தியராலும் உளவியல் வைத்தியராலும் கண்காணிக்கப்பட வேண்டும்.

[6] இலங்கை குழந்தை நல மருத்துவக் கல்லூரி, சிறுவர் துஷ்பிரயோக மற்றும் புறக்கணிப்பு முகாமைக்கான தேசிய வழகாட்டி 2014. வழிகாட்டிகளின் கீழ், 18 வயதுக்குட்பட்ட பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டவுடன் மருத்துவ சட்டப் பிரிவுக்கு அனுப்பப்பட வேண்டும். அப்போது, 24 மணித்தியலத்துக்குள் மருத்துவ வழக்கு கலந்துரையாடலை ஆரம்பிக்கலாம். இதற்குப் http://crm.b2space.com/r library/sites/default/files/National%20Guideline%20for%20The%20 Management%20of%20Child%20Abuse%20and%20Neglect%20A%20%20%20Multi-Sectoral%20Approach.pdf ஊடாகப் பிரவேசிக்கலாம்:

இக்கலந்துரையாடலின் அறிக்கை நன்னடத்தை அதிகாரியால் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய அவரது சமூக அறிக்கையுடன் சேர்த்து சம்பந்தப்பட்ட நீதவானின் பரீசிலனைக்கென நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பிள்ளையைப் பாதுகாப்பான இடத்தில் தங்கவைப்பது குறித்த ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளும் பொழுது நீதவான்கள் சம்பவம் பற்றிய கலந்துரையாடல் அறிக்கைகளைத் தீவிரமாகக் கவனத்தில் எடுக்க வேண்டியது அவசியமாகும்.

குறுகிய கால அல்லது நீண்ட கால உளவளத்துணை தேவையாக இருப்பின் பாதிக்கப்பட்ட பிள்ளையை மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின்[7] சம்பந்தப்பட்ட உளவளத் துணை உத்தியோகத்தரிடம் அல்லது உளவளத் துணை உத்தியோகத்தர்களைக் கொண்ட சிறுவர் பாதுகாப்பு இல்லங்களுக்கு / மையங்களுக்கு அனுப்பமுடியும். மேலும், பாதிக்கப்பட்ட ஒருவரை அரசாங்க ஆஸ்பத்திரிகளில் வழமையாக நடத்தப்படும் மனநல சிகிச்சை நிலையங்களுக்கும் அனுப்ப முடியும்.

5.10 வெளிநாட்டுப் பிரஜைகளின் விசேட தேவைகள்

இலங்கைப் பிரஜைகளின் விடயத்தைப் போலவே, பாதிக்கப்பட்ட பிள்ளை ஒரு வெளிநாட்டவராக இருந்தால், முதலாவது தகவல் / முறைப்பாட்டுப் பதிவானது பொலிஸ் அதிகாரியால் அல்லது NCPA அதிகாரியால் மேற்கொள்ளப்பட வேண்டும். மொழிபெயர்ப்பு / மொழி உதவிகள் தேவைப்படக்கூடிய பிள்ளைகளுக்கான விசேட உதவிகளை / சேவைகளை விசாரணை அதிகாரி பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அதன் பின்னர் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்:

- தேவைப்படுமிடத்து உரிய தூதரகத்துக்கு அறிவித்து உதவி கோருதல்
- நீதவானின் உத்தரவு கிடைத்ததும் பாதிக்கப்பட்ட பிள்ளையை பொருத்தமானதோர் உறைவிடத்தில் தங்க வைத்தல்.
- தற்காலிக விசாவுக்குத் தேவையான அங்கீகாரங்களை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திலிருந்து கோருதல்.
- நீதவானின் அனுமதியின் பேரில் பாதிக்கப்பட்டவரை அவரது சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டுமானால், அவ்வாறு வெளியேறிச் செல்வதற்கு முன் சாட்சியம் பதிவு செய்யப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து தேவையான பிரயாண ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களுக்கு உதவி வழங்கப்படவேண்டும்.
- பாதிக்கப்பட்டவரை அவரின் சொந்த நாட்டிற்கு அனுப்பிய பின்னர் - அதற்கு அவர் உடன்படும் பட்சத்தில் - அவருடைய சாட்சியைப் பதிவுசெய்ய வேண்டுமானால் பொலிஸார் பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகள் பாதுகாப்பு அதிகார சபையின் உதவியுடன் பாதிக்கப்பட்டவரை இலங்கைக்குக் கொண்டுவருவதற்குத் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு மாறாக, சாட்சிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், ஸ்கைப் தொழில்நுட்பம் / ஏனைய தொழில்நுட்ப முறைகள் ஊடாக சாட்சியத்தைப் பதிவுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.
- மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் பிள்ளைகளின் தாய்நாட்டுடன் (மருத்துவம், திருப்பி அனுப்புதல், குடும்பத்தைக் கண்டுபிடித்தல் முதலிய) உடனடி உதவிகளை வழங்குவது தொடர்பான ஒருங்கிணைப்பைக் கட்டியெழுப்புதல்.

[7] பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் ஆலோசனை அதிகாரிகள் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் இருப்பார்கள். பிரதேச செயலகத்திலுள்ள உரிய அதிகாரியைத் தொடர்பு கொள்ள முடியாது போனால், மாவட்ட செயலகத்திலுள்ள ஆலோசனை மேற்பார்வை உத்தியோகத்தரை தொடர்பு கொள்ளலாம்.

5.11 பாதிக்கப்பட்ட பிள்ளையின் பராமரிப்பும் பாதுகாப்பும்

பிள்ளை மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக முடிவெடுப்பதற்கான பூர்வாங்க நேர்காணல் மற்றும் தகவலறியும் செயற்பாடுகளின் பின்னர் பொலிஸ் உத்தியோகத்தர் பிள்ளையின் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன், நீதிமன்றமானது, நன்னடத்தை உத்தியோகத்தரின் சமூக விசாரணை அறிக்கைக்கு இணங்க, பிள்ளையை பெற்றோருடன் அல்லது உரிய பாதுகாவலருடன் இணைக்க முடியாமல் போனால் அரசாங்க உறைவிடமொன்றுக்கு அல்லது பாதுகாப்பு இல்லஅமான்றுக்கு அனுப்பி வைக்கும். பெற்றோருடன் அல்லது பாதுகாவலருடன் வந்துள்ள பிள்ளையை அவர்களிடமிருந்து பிரிப்பது தான் நல்லது என்றிருக்காவிட்டால் பிள்ளையை அவர்களிடமிருந்து பிரித்தலாகாது. பிள்ளை தனியாக இருக்குமானால், விசாரணை உத்தியோகத்தர் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிள்ளையை நீதிமன்றத்துக்கு முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதுடன், நன்னடத்தை உத்தியோகத்தரின் சமூக விசாரணை அறிக்கைக்கு இணங்க, பிள்ளையை தற்காலிகமாக பாதுகாப்பு இல்லம் ஒன்றில் தங்க வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிடும்.

உறைவிடத்தில் அவர்கள் நேரடியான கவனிப்பையும் உதவியையும் பெறுவார்கள் எக்காரணம் கொண்டும் பிள்ளை தடுத்து வைக்கப்படவோ[8] அல்லது (சட்டத்திற்கு முரணான குழந்தைகள் என்றழைக்கப்படுகின்ற) குற்றவாளிகளுடன் தங்க வைக்கப்படவோ கூடாது.

சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கட்டளைச் சட்டத்தின் 35 – 38 ஆம் பிரிலுவுகளில் ஒரு நன்னடத்தை அதிகாரியின்[9] பாகாப்பிலும் மேற்பார்வை அதிகாரத்திலும் வைப்பது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

புகலிடங்கள் குறைந்தபட்ச தர நியமங்களை நிறைவு செய்வதுடன் பின்வருவனவற்றையும் வழங்கவேண்டும்:

- பாதிக்கப்பட்டவர்கள் போதியளவு பாதுகாப்பான, ஆபத்தற்ற நிலையில் தற்காலிகமாக வசிக்கக் கூடிய சுற்றாடல்.
- புகலிட ஊழியர்களுக்கு போதிய, பாதுகாப்பான, ஆபத்தற்ற வேலைச் சுழல்
- மேலும் தீங்கிழைக்கப்படுவதனைத் தவிர்த்துக்கொள்வதற்கும், உச்சமட்ட மீளலுக்கான இயலுமையைப் பெற்றுக்கொடுப்பதற்கும் பாதிக்கப்பட்டவர் சகஜ நிலைக்குத் திரும்புவதற்கும் வசதிகளை வழங்குதல்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்துமடங்கிய தொடர்ச்சியான பராமரிப்புச் சேவைகளை வழங்குவதற்கென நன்கு பயிற்றப்பட்ட ஊழியர்கள் கூட்டாக இணைந்து, ஒவ்வொருவர் ஒவ்வொரு துறையை கையாளும் விதத்தில் செயற்படுதல்.

---

[8] மாற்றுக் கவனிப்புக் கொள்கைகளின் 6.4.20 ஆம் பிரிவானது ஒரு பிள்ளை பாதுகாப்பான இடத்துக்கு, குறிப்பிட்ட தற்காலிக இல்லத்துக்கு அல்லது அவசர உறைவிடத்துக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. பார்க்க:
http://www.probation.gov.lk/documents/downloads/Draft%20Alternative%20Care%20Policy.pdf

[9] பிரிவு 35 – பிள்ளைக்கு அல்லது இளைஞனுக்கு கவனிப்பு அவசியமாகும் என்று சிறுவர் நீதிமன்ற நீதவான திருப்திப்பட்டால் மற்றும் பிள்ளை 12 வயதை எட்டியும் இருந்தால், பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்:

- பிள்ளையை அங்கீகரிக்கப்பட்ட அல்லது சான்றளிக்கப்பட்ட ஒரு பாடசாலைக்கு அனுப்புதல்
- பிள்ளையின் கவனிப்பைப் பொறுப்பேற்க விரும்புகின்ற ஓர் உறவினர் அல்லது பாதுகாவலரான பொருத்தமான ஒருவரிடம் ஒப்படைத்தல்
- முறையான கவனிப்பை வழங்க வேண்டும் என்ற கடும் பரிந்துரையுடன் பிள்ளையைப் பெற்றோருடன் அல்லது பாதுகாவலருடன் அனுப்பி வைத்தல்
- 3 வருடங்களைத் தாண்டாத ஒரு காலத்துக்கு நன்னடத்தை அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் பிள்ளையை வைத்தல்.

- ஒவ்வொருவருக்குமான தனியான சேவைத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான தரமான பாதுகாப்பு மற்றும் உதவி.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் தொடர்பான நிலையியற் கட்டளைகள், தற்பொழுது பிள்ளைகளுக்கான பாதுகாப்பு இல்லங்கள் குறித்த ஆகக்குறைந்த தர நியமங்களாகப் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

5.12 பெற்றோர், சட்ட ரீதியான பாதுகாவலர் அல்லது பொருத்தமான நபர் (Fit Person) ஆகியோருக்கு தெரியப்படுத்தப்பட வேண்டிய தகவல்கள்:

- குற்றச் செயல் மற்றும் குற்றச் செயலினை இழைத்த நபர்கள் தொடர்பாக மட்டும் இரகசியமான தகவல்களை வழங்க வேண்டிய தேவையுள்ளது. வழங்கப்படும் தகவல்கள் வெளிக்கூறல் தேவைப்பாடுகளுக்கு உள்ளாக்கப்பட முடியும் என்ற விடயம்.
- தமக்கு எதிராக இழைக்கப்பட்டிருக்கும் குற்றச் செயல்களுக்கு நட்டஈடு கோருவதற்கான சட்ட ரீதியான வாய்ப்புக்கள்.
- நீதிமன்றச் செயன்முறை, நடவடிக்கை முறைகள் மற்றும் வழக்கில் வஞ்சக் கடத்தலை நடத்திய நபர் நேரடியாக பிரச்சன்னமாகியிருத்தல்.
- வழக்கு நடவடிக்கைகளுக்கென சாட்சியமளிக்க வேண்டிய தேவை மற்றும் சாட்சியமளிப்பதன் பின்விளைவுகள். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அனுசரணையுடன் வாக்குமூலங்களை / சாட்சியத்தை வீடியோவில் பதிவு செய்யும் விருப்பத் தெரிவு குறித்த தகவல்களும் வழங்கப்படுதல் வேண்டும்.
- ஒரு புகலிடத்தில் தங்குதல் மற்றும் அவ்விதம் தங்கியிருத்தல் தொடர்பான நிபந்தனைகள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் தனிப்பட்ட பாதுகாப்பினை (குடும்பத்தின் பாதுகாப்பினையும்) உத்தரவாதப்படுத்துவதற்கென மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்.

5.13 பொலிஸாரினால் நடத்தப்படும் விசாரணை (வழக்குக்கு முன்னர்)

விசாரணைகள் பொலிஸாரினால் நடத்தப்படும். பிள்ளையினை மனித வியாபாரம் செய்தமை பற்றிய விசாரணைகள் மனித வியாபாரம் செய்த குற்றம் தொடர்பான சாட்சிகளைத் தீர்மானிக்க முயற்சிக்கின்றது: செயல் (வாங்குதல், ஏற்றி இறக்கல் மற்றும் ஆட்சேர்ப்பு) மற்றும் நோக்கம் (சுரண்டல்): சான்றுகளைச் சேகரித்தல் மற்றும் விசாரணை என்பன பிள்ளையின் வாக்குமூலத்தின் அடிப்படையில் குற்றவியல் அதிகாரியின் காட்சிகளுடன் (SOCO) பொலிஸ் விசாரணை அதிகாரியால் நடாத்தப்படும். சட்ட மருத்துவ அதிகாரி (JMO) யின் உதவி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். குற்றம் நடந்த இடத்தின் அவதானக் குறிப்புக்கள் பிள்ளையின் வாக்குமூலத்துக்கு இணங்கவும் குற்றம் நடந்த இடத்துக்கான விஜயத்துக்கு இணங்கவும் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதுடன், சம்பந்தப்பட்டுள்ள ஏனைய ஆட்களின் வாக்குமூலங்களும் பதிவு செய்யப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் பயந்தவர்களாகவும், பொலிஸ் நிலையங்களுக்கு செல்லுதல், நீதிமன்றம், மற்றும் சட்ட நடவடிக்கைகள் பற்றி பதற்றமடைந்தவர்களாகவும் காணப்படுவார்கள். பாதிக்கப்பட்டவரை மையப்படுத்திய ஓர் அணுகுமுறை ஊடாக வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்டவர்கள் / பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் ஆகியோருக்கு பாதிக்கப்பட்டிருப்பவர்களின் உரிமைகள் குறித்து அறிவிக்க வேண்டியிருப்பதுடன் இச்செயன்முறை மூலம் பொலிஸ் மற்றும் நன்னடத்தை அதிகாரிகளால் அவர்களுக்கு வழிகாட்டல்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

5.13.1 நீதிமன்றத்துக்கு தகவல்களை அறிக்கையிடல்

ஆரம்ப விசாரணைகள் ஊடாக சேகரிக்கப்பட்ட தகவல்களின் ஒரு சாராம்சத்தை சம்பந்தப்பட்ட விசாரணை அதிகாரி நீதி மன்றத்துக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அதன் பின்னர் தேவைக்கு ஏற்றபடி பின்வருவன தொடர்பில் உத்தரவினை வழங்குமாறு நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ளுதல் வேண்டும்:

பிரிவு 38 – நன்னடத்தை உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் மேற்பார்வை
நன்னடத்தை உத்தியோகத்தர்கள் :

- அடிக்கடி பிள்ளையை சந்திக்க முடியும்; அல்லது பிள்ளையின் நலனோம்பல் குறித்த அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- நீதிமன்றத்தின் நிபந்தனைகள் அனுசரிக்கப்பட்டு வருகின்றனவா என்பதைப் பரிசீலிக்க முடியும்.
- பிள்ளையின் நடத்தை தொடர்பாக நீதிமன்றத்திற்கு அறிக்கையிட முடியும்.
- ஒரு தொழிலைப் பெற்றுக்கொள்வதற்கு பிள்ளைக்கு ஆலோசனை வழங்கி, உதவ முடியும்.

(1) சட்ட வைத்திய அதிகாரி பிள்ளையைப் பரிசோதித்து நீதி மன்றத்துக்கு ஓர் அறிக்கையை சமர்ப்பித்தல்
(2) அரசாங்கப் பகுப்பாய்வாளரின் அறிக்கை
(3) பிள்ளையின் அரவணைப்பு மற்றும் பாதுகாப்புக்கான கட்டளை
(4) உரிய சந்தேக நபர்களை தடுப்புக் காவலில் வைத்தல்
(5) தேவைப்படுமிடத்து சாட்சிகளை வீடியோ எடுத்தல்
(6) தேவைப்படுமிடத்து கோப்பினைப் பாதுகாப்பான ஓரிடத்தில் வைத்தல்

1995 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சாட்சிகள் கட்டளைச் சட்டம் வீடியோ மூலம் பிள்ளைகளின் சாட்சியத்தைப் பதிவுசெய்வதற்கு அனுமதியளிக்கின்றது. தேவையேற்படும் சந்தர்ப்பங்களில், உரைபெயர்ப்பாளர்களின் உதவி பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் அல்லது தொழில் உத்தியோகத்தர் ஆகியோர் பொருத்தமான விதத்தில் விசாரணை உத்தியோகத்தருக்கு உதவவேண்டும்.

*வெளிநாட்டில் அடையாளங்காணப்பட்டிருக்கும் மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஓர் இலங்கைப் பிள்ளை தொடர்பான எந்த ஒரு விடயம் பற்றியும் உதவுமாறு நன்னடத்தை ஆணையாளரிடம் கேட்டுக் கொள்ளப்படும். இந்த வேண்டுகோள் இலங்கை தூதுவராலயம் / தூதாண்மை மற்றும் வெளி விவகார அமைச்சு என்பவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும்.

5.14 வழக்கு

விசாரணையை மேற்கொள்கின்ற அதிகாரி சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து தகவல்களையும் சேகரித்து விசாரணையைப் பூரணப்படுத்திய பின்னர், ஆலோசனைக்கும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்குமாக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அதனை அனுப்பி வைப்பார்.

சிறுவர்கள் தொடர்பான வழக்கு தொடுப்புக்களைக் கையாளும் பணி ஒப்படைக்கப்பட்டிருக்கும் பிரத்தியேகமான சிறுவர் பாதுகாப்பு அலகு ஒன்றை (CPU) சட்டமா அதிபர் திணைக்களம் கொண்டுள்ளது. மேலும் சிறுவர்கள் தொடர்பான அனைத்து வழக்குக் கோப்புக்களும் 'CH' என்ற எழுத்துக்களுடன் வகைப்படுத்தப்பட வேண்டும். இந்த வகைப்படுத்தல் செயன்முறை சம்பந்தப்பட்ட கோப்புக்கள் மிக விரைவாகச் சிறுவர் பாதுகாப்பு அலகுக்கு அனுப்பி வைக்கப்படுவதனை உறுதிப்படுத்துகின்றது. சிறுவர் பாதுகாப்பு அலகு இரு கருமங்களைக் கொண்டுள்ளது: (1) குற்றவாளிகள் எனச் சந்தேகிக்கப்படும் பிள்ளைகள் தொடர்பாக நீதவான் நீதிமன்றத்தின் மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும் வழக்குகளில் பிள்ளைகள் குற்றவாளி ஆக்கப்பட வேண்டுமா அல்லது விடுவிக்கப்பட வேண்டுமா என்பது குறித்து ஆலோசனை வழங்குதல்; மற்றும் (2) பிள்ளைகளுக்கு எதிராக இழைக்கப்பட்டிருக்கும் குற்றச் செயல்களுக்கு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தல். சிறுவர் பாதுகாப்பு அலகு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் வரையில் மட்டுமே வழக்கு கோப்புக்களை கையாள்கின்றது.

விசாரணை உத்தியோகத்தர் வழக்கு விவரங்கள் தொடர்பாக மட்டுமன்றி, பாதிக்கப்பட்டவர் மன அழுத்தத்தின் கீழ் அல்லது மன அதிர்ச்சியின் கீழ் இருக்கின்றாரா அல்லது அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளாரா, எவையேனும் ஒழுங்கமைந்த குற்றச்செயல்களுடன் தொடர்பினைக் கொண்டுள்ளாரா, வழக்குக் காலம் வரையிலும், அதனைத் தொடர்ந்தும் அவருக்கு ஏதேனும் விசேட பராமரிப்பு மற்றும் கவனிப்பு என்பன தேவைப்படுகின்றதா போன்ற விசேட அம்சங்கள் குறித்து அரச தரப்பு வழக்கறிஞருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதுடன் அவருக்கு இது தொடர்பாக எடுத்து விளக்கவும் வேண்டும்.

இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் வழிமுறைகள் தவிர, பாதிக்கப்பட்டிருக்கும் பிள்ளைகள் தம்மை வழக்குக்குத் தயார்படுத்தவும் அதனை எதிர்கொள்வதற்கும் (வழக்கு விசாரிக்கப்படும் சந்தர்ப்பத்தையும் உள்ளடக்கிய விதத்தில்) - குறிப்பாக மனித வியாபாரத்தை மேற்கொண்டிருக்கும் நபர் ஆஜராகியிருக்கும் நிலையில் அதனை எதிர்கொள்வதற்கும் - தம்மை தயார்படுத்திக் கொள்ள உளவளத்துணை மற்றும் உள சமுக ஆதரவு வழங்கப்பட வேண்டும்.

முடியுமான வரையில் வீடியோ சாட்சிகள் பயன்படுத்தப்பட வேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்டிருக்கும் பிள்ளையைத் துன்புறுத்தாத விதத்திலும் பிள்ளைக்கு அச்சத்தை ஏற்படுத்தாத விதத்திலும் அல்லது பிள்ளையினைப் பயமுறுத்தாத விதத்திலும் குறுக்கு விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். வழக்கு நடத்தப்படும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தேவையான விதத்தில் போதிய நேரத்தினை ஓய்விற்காக வழங்குவதன் மூலம் அதிகாரிகள் பிள்ளையின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி வைக்க வேண்டும் (சாட்சிகள் கட்டளைச் சட்டம் 1999, பிரிவு 32).

வழக்கு விசாரணை நடைபெறும்போது மட்டுமே பிள்ளைகள் நீதிமன்றத்திற்குக் கூட்டி வரப்பட வேண்டும்; விசாரணைக்கு முன்னரோ அல்லது விசாரணையின் பின்னரோ அப்பிள்ளைகளை தேவையற்ற வகையில் நீதிமன்றத்தினுள் தரித்திருக்கச் செய்யக்கூடாது. வழக்கு விசாரணைகளில் நீண்ட தாமதங்கள் இடம் பெறுவதைத் தடுக்கும் பொருட்டு DNA அறிக்கைகள், சட்ட மருத்துவ அதிகாரி (JMO) மற்றும் அரசாங்க பகுப்பாய்வாளர்கள் ஆகியோரின் அறிக்கைகள் போன்ற உறுதிப்படுத்தல் சான்றாவணங்களை விரைவாகச் சமர்ப்பிப்பதற்குரிய வழிமுறைகளை பங்குதாரர்கள மேற்கொள்ள வேண்டுமென இங்கு பரிந்துரை செய்யப்படுகின்றது.

5.15 வழக்கின் பின்னர்

மேலதிக பாதுகாப்பு நடைமுறைகள், அதே போல நிலையான இயக்குதல் நடைமுறைகளில் (SOP) உள்ளடக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு வழிமுறைகள் என்பன தவிர, நன்னடத்தை உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்கள் தமது குடும்பங்களுடன் மீள ஒருங்கிணைக்கப்படுவதற்கும், மீள இணைக்கப்படுவதற்குமென பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இந்தச் செயன்முறை சம்பவ முகாமைத்துவ செயன்முறையின் ஒரு பாகமாக மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதுடன், முழுமையாக பங்கேற்பு இயல்பினைக் கொண்டதாகவும் இருந்து வர வேண்டும். பிள்ளை மற்றும் அப்பிள்ளையின் குடும்பத்தினர் ஆகியோரின் முழுமையான பங்கேற்புடன் இது இடம்பெறுதல் வேண்டும். ஒரு பிள்ளை 18 வயதை பூர்த்தி செய்யும் வரையில் அல்லது நீதிமன்ற வழக்கு முடிவடையும் வரையில், சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புக்களுடன் ஒருங்கிணைப்புக்களை மேற்கொண்டு, பொலிஸாரினால் பாதுகாப்பு மற்றும் ஏனைய நலநோம்பல் உதவிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

5.16 சிறுவர் மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கையரை மற்றும் வெளிநாட்டவர்களை இலங்கைக்கு அழைத்துவரல் மற்றும் இலங்கையிலிருந்து திருப்பியனுப்புதல்

பிள்ளை பாதிக்கப்பட்ட ஒரு வெளிநாட்டவராக இருப்பின், ஆயுத வன்முறை, மனித வியாபாரம், துஷ்பிரயோகம், சுரண்டல் ஆகியவற்றில் இருந்து பிள்ளை பாதுகாப்புப் பெறுவது பற்றிக் கவனத்தில் எடுத்து, பிள்ளையை மீண்டும் திருப்பியனுப்புவது பாதுகாப்பானதா என்பதைக் கண்டறியும்பொருட்டு தாய்நாட்டில் அல்லது பிள்ளை இருக்கும் இடத்தில் ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், பிள்ளையின் குடும்பத்திற்குள் நிலவி வரும் பாதுகாப்பு மட்டம் குறித்தும் மதிப்பிடப்படுதல் வேண்டும். இது ஒரு நீதிமன்றக் கட்டளை ஊடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.[10] பிள்ளையை அதன் தாய் நாட்டிற்குத் திருப்பியனுப்பும் வரையில் (திருப்பியனுப்புவதாக இருந்தால்) அப்பிள்ளை (பொருத்தமாயின் குடும்பம்) கண்ணியத்துடன் நடத்தப்படவேண்டும். மேலும் போஷாக்கு, சுகாதாரம், தங்குமிடம், கல்வி, மற்றும் பாதுகாப்பு போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான சேவைகளை பொருத்தமான விதத்தில் அணுகக்கூடிய நிலையிலும் பிள்ளை இருக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களை மீள அழைத்துவருதல் / அவர்களுடைய நாட்டுக்கு அனுப்பி வைத்தல் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுச் சிறுவர்களைப் பொறுத்தளவில், இலங்கையிலுள்ள பிள்ளைக்காக வழங்கப்படக்கூடிய பாதுகாப்பு மட்டத்தின் மதிப்பீடு ஒன்றும் இருத்தல் வேண்டும். ஒரு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இல்லாத போது அவசியமாகின்ற கவனிப்பு மற்றும் பாதுகாப்பும் இதில் உள்ளடக்கப்பட வேண்டும். விசாரணைகளும் நீதிமன்ற செயற்பாடுகளும் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்ற அதே சமயத்தில், சிறந்த சூழல், வாழ்க்கைத் தரம் ஆகியவற்றைத் தீர்மானிப்பதையும் மதிப்பீடு உள்ளடக்குல் வேண்டும். பாதிக்கப்பட்டுள்ள பிள்ளை தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து தீர்மானங்களும் நடவடிக்கைகளும் பிள்ளையின் உரிமையைப் பாதுகாத்தல் தொடர்பான தத்துவங்கள் வழிகாட்டல்கள் என்பவற்றுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

[10] விசாரணை குறிப்பிட்ட விடயத்தை நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லல் வேண்டும். நீதிமன்ற உத்தரவுக்கு அமைய பிள்ளையின் பூர்வீக நாட்டில் இருந்து பிள்ளையின் குடும்ப விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட விசாரணைகளை அதிகாரி மேற்கொள்ளுதல் வேண்டும்.

5.17 மீள் ஒருங்கிணைப்பு

பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான நேரடி உதவிகள் இரண்டு கட்டங்களில் இடம் பெறுகின்றது: அவை, இடைக்கால உதவி, மற்றும் மீள்-ஒருங்கிணைப்புக் காலத்தையும் உள்ளடக்கிய நீண்ட கால உதவி ஆகியனவாகும். பிரிவுகள் 5.8 - 5.11 இல் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல, இடைக்காலக் கட்ட உதவியின் போது, பாதிக்கப்பட்டவர்களுக்கு (உணவு, உறையுள், சட்ட ஆலோசனைகள், கல்வி, மருத்துவப் பராமரிப்பு, பாதுகாப்பு போன்ற) அடிப்படைத் தேவைகள் வழங்கப்படும். தற்காலிகத் தங்குமிடத்தில் இருக்கின்ற பொழுது குடும்பத்தைத் தேடிக் கண்டு பிடித்தல் மற்றும் மதிப்பிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாதுகாப்பான இடத்தில் அவர்கள் இருக்கின்ற சமயத்தில், நன்னடத்தை அதிகாரிகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அபிவிருத்தித் துறைகள் மீது கவனம் செலுத்தக்கூடிய ஒவ்வொரு பிள்ளைக்குமான[11] நிகழ்ச்சி முகாமைத்துவ செயன்முறையைப் பின்பற்ற வேண்டும்:

- பாடசாலைகளில் சேர்த்தல் மற்றும் / அல்லது ஏனைய தொழில்நுட்பத் திறண் பயிற்சிக்கான வசதி
- பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டுக்கான வசதி
- நீண்ட கால ஆலோசனை

பராமரிப்புத் திட்டமிடல் மற்றும் நிகழ்வு முகாமைக்காக நன்னடத்தை அதிகாரிகளால் மேற்கொள்ளப்படுகின்ற குடும்ப மற்றும் சமூக மதிப்பீடுகளானது பிள்ளைக்கான மீள்ஒருங்கிணைப்பு திட்டத்தை வடிவமைப்பதற்கான அடிப்படையை வழங்குகின்றது. மீள்-ஒருங்கிணைப்புத் திட்டமானது, மொத்த நிகழ்வு முகாமை அணுகலின் ஒரு பாகமாக விளங்குவதுடன், மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பிள்ளைக்குமான பொருத்தமான இலக்காகவும் இருத்தல் வேண்டும்.

பாதிக்கப்பட்டுள்ள ஒரு பிள்ளை மீளிணைக்கப்பட்டதும் தொடர் கண்காணிப்பும் மேலும் நீண்ட கால உதவிச் சேவைகளும் நன்னடத்தை உத்தியோகத்தராலும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தராலும் வழங்கப்பட வேண்டும். மீள் ஒருங்கிணைப்புக் காலத்திலும் அதன் பின்னரும் பராமரிப்பின் ஸ்திரத் தன்மையுடன் தொடர்புடைய நடைமுறைகளை உறுதி செய்து கொள்வதற்கு "மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளை அவர்களது பெற்றோர்களுடனும் சமூகத்துடனும் மீள் ஒருங்கிணைப்பதற்கான வழிகாட்டி (DPCCS மற்றும் Save the Children 2020)" பின்பற்றப்பட வேண்டும்.

[11] DPCCS இன் அனைத்து உத்தியோகத்தர்களும் நிகழ்வு முகாமைத்துவ வேலைகளுக்கு வழிகாட்டுவதற்காக பிள்ளைகளுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதற்கான தேசிய வழிகாட்டியைப் பின்பற்றுதல் வேண்டும். (DPCCS 2018)

பின்னிணைப்பு 1 – தகவலறியும் விசாரணைக்கான குறிகாட்டிகள்[12]

வெளிக்களப் பணிகளின் போது மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களை அடையாளம் காணுதல்

சிறுவர்களை மனித வியாபார சம்பவம் ஒன்றின் சாத்தியம் அல்லது சந்தேகம் பற்றி முன்னரங்கப் பணியாளர்கள் அல்லது சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்கள் மத்தியில் சந்தேகத்தினை ஏற்படுத்துவதற்கான ஒரு சில அடையாளங்கள் அல்லது குறிகாட்டிகள் இருந்து வருகின்றன. இந்த அடையாளங்களின் அடிப்படையில் முன்னரங்கு உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிறுவர் மனித வியாபாரத்தினால் பாதிக்கப்படக்கூடியவர்களை அடையாளம்காண முயற்சிக்க முடியும். சிறுவர் மனித வியாபாரம் இடம்பெற்றுள்ளதா அல்லது இல்லையா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான முழுமையான விபரங்களைக் கண்டறிவதற்காக விரிவான ஒரு நேர்காணல் நடத்தப்படவேண்டும்.

குறிப்பு : மனித வியாபாரம் செய்பவர்கள் பெரும்பாலும் வஞ்சக் கடத்தல் செய்யப் போகும் பிள்ளையினதும் அதன் குடும்பத்தினதும் சமுதாயத்தினதும் நம்பிக்கையை வென்றெடுப்பதற்காக அவர்களைத் தமக்கு இணங்குபவர்களாக ஆக்கிவருகின்றனர். அவர்கள் குடும்பங்களை அல்லது பிள்ளையை வன்முறை அல்லது அச்சுறுத்தல் என்பவற்றின் மூலம் பயமுறுத்தவும் முடியும். சில சந்தர்ப்பங்களில் சிறுவர்கள் என்ன நடக்கின்றது என்பதை அல்லது தமக்கு என்ன நடந்துள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். அவர்கள் பெருமளவுக்கு அச்சமடைந்தவர்களாக இருக்க முடியும் எனவே நீங்கள் பின்வரும் அடையாளங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

அடையாளம் (சமூக மற்றும் உணர்வு சார் அடையாளங்கள்)

பிள்ளை,

- அச்ச உணர்வுடையதாக, மனச்சோர்வுடையதாக, மன விரக்தியுடையதாக, அடிபணிந்து போகக்கூடியதாக, பதற்றமுடையதாக, திகிலுற்றதாக அல்லது தடுமாற்றம் உடையதாக இருத்தல்.
- என்ன செய்வதென்றறியாத அல்லது குழப்பமற்றவராக இருக்க முடியும்.
- அயர்ச்சி மற்றும் கவனம் செலுத்த முடியாமை.
- காலம் குறித்த ஞாபகமின்மை.
- போதைப் பொருள் பாவனை அல்லது போதைப் பொருளுக்கு அடிமையாதல்.

[12] சிறுவர் மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களை நேர்காணல் தொடர்பில் சட்டத்தை அமுலாக்கும் உத்தியோகத்தர்களுக்கான வழிகாட்டல்களில் இருந்து. (**NCPA** 2020)

- எழுதப்பட்ட, குழப்பமான அல்லது ஒன்றுக்கொன்று முரண்பட்ட கதைகளைப் பகிர்தல்.
- தமது பெற்றோருடன் அல்லது பாதுகாவலர்களுடன் வரையறுக்கப்பட்ட தொடர்புடையோராக அல்லது அறவே தொடர்பற்றவர்களாக இருத்தல்
- அதிகாரிகள் குறித்து அவநம்பிக்கையுடன் இருத்தல். தம்மைச் சூழவுள்ள சட்ட அமுலாக்கல் மற்றும் குடியகல்வு அதிகாரிகள் தொடர்பாக அவநம்பிக்கையுடன் இருத்தல்.
- உதவியைப் பெற்றுக்கொள்ளும் விடயத்தில் தயக்கம் காட்ட முடியும்.

உடல் ரீதியான அடையாளங்கள்

பிள்ளை,

- மோசமான உடல் சுகாதாரம், போஷாக்கின்மை, வரண்ட நிலை மற்றும்/அல்லது அயர்ச்சி என்பவற்றிற்கான அடையாளங்கள்.
- உடல் மற்றும்/அல்லது பாலியல் துஷ்பிரயோகம், கட்டிவைத்தல், சிறைப்படுத்தல் அல்லது சித்திரவதை என்பவற்றின் அடையாளங்கள்.
- சுகமடையும் பல்வேறு கட்டங்களில் காணப்படும் காயங்கள் அல்லது சிறாய்வுகள், மற்றும்/அல்லது சிகிச்சை அளிக்கப்படாத நோய்கள் அல்லது தொற்றுநோய்கள்.
- தாம் கூறும் வயதிலும் பார்க்க இளையவர்களாகத் தென்பட முடியும். (தாம் வயது வந்தவர்கள் எனக் கூறுமாறு மனித வியாபாரம் செய்பவர்கள் சில நேரங்களில் சிறுவர்களிடம் கூறுகின்றார்கள்.

பிள்ளை,

- வேலை செய்பவர் ஆனால் பாடசாலை செல்லாமை
- விளையாடுவதற்கோ அல்லது ஏனைய ஓய்வுநேரப் பொழுதுபோக்குகளுக்கோ நேரம் இல்லாமை.
- தமது உறவினர்கள் அல்லாத வயது வந்தவர்களுடன் பயணம் செய்ய முடியும் அல்லது சேர்ந்து வாழ முடியும்.
- தாம் வசித்து வரும் நகரம், பட்டினம் அல்லது நாடு கூட என்ன என்பது குறித்து அறியாமல் இருத்தல்.
- தனிப்பட்ட தகவல்களை பகிரமுடியாதவர்களாக அல்லது தயக்கம் காட்டுபவர்களாக, தாம் எந்த இடத்தில் வசித்து வருகின்றார்கள் என்பதைக் கூற முடியாதவர்களாக இருத்தல்.
- அவர்களிடம் இருக்கும் என நீங்கள் எதிர்பார்க்காத பணத் தொகைகளை அல்லது உடைமைகளைத் தம்வசம் வைத்திருக்க முடியும் (உதாரணம்: விலை உயர்ந்த ஆடைகள் அல்லது பொருட்கள்).பின்னிணைப்பு 2: மனித வியாபாரத்தினால் பாதிக்கப்படக்கூடிய ஆட்களை அடையாளம் காணும் செயற்பாட்டில் உதவக்கூடிய பூர்வாங்க விசாரணை முறைமை.[13]

பின்னிணைப்பு 2: மனித வியாபாரத்தினால் பாதிக்கப்படக்கூடிய ஆட்களை அடையாளம் காணும் செயற்பாட்டில் உதவக்கூடிய பூர்வாங்க விசாரணை முறைமை.[13]

